**TAM 2261 / TAS 2261** **பொதுத்தமிழ் - III** **3 Hrs/2Cre**

---

**நோக்கம்:**

பொதுத்தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பகுதி I பிரிவில் அமைகிறது இப்பாடம். முதலிரண்டு பருவங்களில் பயின்ற இலக்கியங்களுக்கு முந்தைய காலகட்ட இலக்கியங்களை அறிமுகப்படுத்துகிறது. அந்தவகையில் காப்பியங்கள் தொடங்கி நவீன இலக்கியம் தொடங்குவதற்கு முன்பு வரையிலான இலக்கியங்கள் இப்பாடத்திற்குள் அடங்கும்.

**கற்றலின் பயன்:**

1. இலக்கண வரையறைகளுக்கேற்ப அமைந்த காப்பியங்களை அடையாளங்காணும் திறன்பெற்றிருப்பர்.
2. பக்தி இலக்கியங்கள், படைக்கப்பட்ட காரணிகளை ஒப்பிட்டுப் பிறவற்றிலிருந்து வேறுபடும் பாங்கை அறியும் திறன்களைப் பெற்றிருப்பர்.
3. சிற்றிலக்கியங்களின் உள்ளடக்கத்தினை அக்காலகட்ட பின்னணியில் பொருத்திப் பார்க்கும் திறன்களைப் பெற்றிருப்பர்.
4. சித்தர் பாடல்கள் இலக்கியமாகவும் மெய்யியலாகவும் அமைந்துள்ள பாங்கினை பகுத்தறியும் திறன்களைப் பெற்றிருப்பர்.
5. காப்பியங்கள் பக்திபாடல்கள், சித்தர்பாடல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து திறனாய்வுகட்டுரைகளாக ஆக்குகிற ஆற்றல்களைப் பெற்றிருப்பர்.

**பாடத்திட்டம்:**

**கூறு : 1 காப்பியங்கள்**

1. சிலப்பதிகாரம் - மங்கலவாழ்த்துப் பாடல்
2. மணிமேகலை - ஆதிரை பாத்திரம் பெற்ற காதை
3. கம்பராமாயணம் - வாலி வதைப்படலம் (12 பாடல்கள்)

**கூறு : 2 பக்தியிலக்கியம்**

4. பன்னிரு திருமுறைகள் - 12 பாடல்கள் (திருமுறைக்கு ஒரு பாடல்)

5 நாச்சியார் திருமொழி (ஆண்டாள்) குயில் பத்து

**கூறு : 3 சிற்றிலக்கியம்**

6. தமிழ்விடு தூது – தமிழின் சிறப்புகள் (12 கண்ணிகள்)

6. திருக்குற்றாலக்குறவஞ்சி - 1.மலைவளம், 2.நாட்டுவளம் - 4 பாடல்கள்

7. முக்கூடற்பள்ளு- 1.மழைக்குறி – தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள்

8. கலிங்கத்துப்பரணி- காடுபாடியது - 10 பாடல்கள்

**கூறு : 4 சித்தர் இலக்கியம்**

9. திருமூலர் - (5 பாடல்கள்)

10. பட்டினத்தார் - தகனக்கிரியை - (4 பாடல்கள்)

12. சிவவாக்கியர் - உற்பத்தி நிலை 5 பாடல்கள்

**கூறு : 5 கட்டுரையிலக்கியம்**

1. உவேச - செண்டலங்காரர்
2. அ.கா.பெருமாள் - சிலப்பதிகாரமும் கோவலன் கதைகளும்
3. நாஞ்சில் நாடன் - எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது
4. ஆ. சிவசுப்பிரமணியன். - சித்தர்கள்: மீறலே மரபாய்

**பாடநூல் :** தமிழ்த்துறை வெளியீடு, அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | **2** | | | | |
| **CO2** | 1 | 2 | **3** | **4** | | |
| **CO3** | 1 | 2 | 3 | | | |
| **CO4** | 1 | 2 | 3 | **4** | | |
| **CO5** | 1 | 2 | 3 | 4 | 5 | **6** |

MEAN : 2.6

# 1. மங்கல வாழ்த்துப் பாடல்

## வாழ்த்தும் வணக்கமும்

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!-
கொங்கு அலர் தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்று, இவ்
அம் கண் உலகு அளித்தலான்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!-
காவிரி நாடன் திகிரி போல், பொன் கோட்டு
மேரு வலம் திரிதலான்.

மா மழை போற்றுதும்! மா மழை போற்றுதும்!-
நாம நீர் வேலி உலகிற்கு, அவன் அளி போல்,
மேல் நின்று தான் சுரத்தலான்.

பூம் புகார் போற்றுதும்! பூம் புகார் போற்றுதும்!-
வீங்கு நீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்து ஒழுகலான்.

*[திங்கள் - நிலவு; கொங்கு - பூந்தாது; தார் - மாலை(ஆத்தி மாலை. இதன் தற்காலப் பெயர் மந்தாரம்); சென்னி - சோழன்; அம்கண் - அகன்ற இடம்; திகிரி - ஆணைச் சக்கரம்; நாம(ம்) - அச்சம்; அளி - அருள்; வீங்கு நீர் - மிகுந்த நீர்; வேலி-எல்லை.]*

திங்களைப் போற்றுவோம்; திங்களைப் போற்றுவோம். பூந்தாதின் மணம் வீசும் ஆத்தி மாலையை அணிந்த சோழமன்னனின் குளிர்ந்த வெண்கொற்றக் குடையைப் போன்று திங்களும் அழகிய இடமகன்ற இவ்வுலகைக் காப்பதால் நாம் திங்களைப் போற்றுவோம்.

கதிரவனைப் போற்றுவோம்; கதிரவனைப் போற்றுவோம். காவிரி நாட்டினை ஆளுகின்ற சோழமன்னனது ஆணைச் சக்கரம் போன்று பொன்னிற உச்சியை உடைய மேருமலையை அது வலம் வருதலால் நாம் கதிரவனைப் போற்றுவோம்.

பெருமை பொருந்திய மழையைப் போற்றுவோம்; பெருமை பொருந்திய மழையைப் போற்றுவோம். அச்சம் தரும் கடல் சூழ்ந்த இந்த உலகிற்கு, சோழமன்னன் அருள்செய்து காப்பதுபோல மழையும் மேல்நோக்கி எழுந்து பின் பொழிந்து வளம் சுரத்தலால் நாம் மழையைப் போற்றுவோம்.

பூம்புகாரைப் போற்றுவோம்; பூம்புகாரைப் போற்றுவோம். கடலை வேலியாய்க் கொண்ட இவ்வுலகில் தோன்றுதொட்டு, சோழ மன்னனது குலத்தோடு பிறந்து உயர்ந்து புகழ்பரவி அது திகழ்வதால் நாம் பூம்புகாரைப் போற்றுவோம்.

### புகார்ச் சிறப்பு

ஆங்கு .
பொதியில் ஆயினும், இமயம் ஆயினும்,
பதி எழு அறியாப் பழங் குடி கெழீஇய
பொது அறு சிறப்பின் புகாரே ஆயினும்,
நடுக்கு இன்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார், உயர்ந்தோர் உண்மையின்,
முடித்த கேள்வி முழுது உணர்ந்தோரே.
அதனால்,
நாகநீள் நகரொடு நாகநாடு-அதனொடு
போகம்நீள் புகழ் மன்னும் புகார்-நகர்.

*[நடுக்கு - அழிவு; ஒடுக்கம் - முடிவு; கேள்வி - நூல் பொருள்; நாகநீள்நகர் - சொர்க்கம்.]*

அவ்வாறு வாழ்த்தி வணங்குதலோடு,

பொதிகைமலை, இமயமலை, நகரத்தைவிட்டுப் பெயர்தலை அறியாத பழங்குடிகள் கொண்ட தனக்கே உரிய சிறப்புடைய புகார்நகரம் ஆகிய இம்மூன்று இடங்களிலும் உயர்ந்தோர் வாழ்வதால் அந்நகரம் நடுக்கமின்றி நிலையாக இருக்குமேயொழிய அழியக் கூடியது அல்ல என்பர் முற்றிய கேள்விகள் அனைத்துமுடைய சான்றோர்.

அவ்வாறு நிலைத்திருக்கக்கூடிய தன்மை உடையதால் 'நாகநீள்' எனப்படும் தேவருலகோடும் 'நாகநாடு' எனப்படும் நாகருலகத்தோடும் ஒப்பாகக் கூறக் கூடிய செல்வமும், நீண்ட புகழும் பெற்று விளங்குவது புகார் நகரம் ஆகும்.

## கண்ணகியின் குலமும் நலமும்

மாக வான் நிகர் வண் கை மாநாய்கன் குலக் கொம்பர்; அது தன்னில்,
ஈகை வான் கொடி அன்னாள்; ஈர் - ஆறு ஆண்டு அகவையாள்;
அவளும் - தான்,
போதில் ஆர் திருவினாள் புகழ் உடை வடிவு என்றும்,
தீது இலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்,
மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெரும் குணத்துக்
காதலாள்; பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ.

*[ஈகை - பொன்; அகவை - வயது; திருவினாள் - இலக்குமி; வடமீன் - அருந்ததி; வயங்குதல் - விளங்குதல்.]*

அந்நகரில் மழைக்கு நிகராகக் கொடுக்கக்கூடிய கையினையுடைய 'மாநாய்கன்' எனும் வணிகனது குலத்தில், பன்னிரண்டு வயதுடைய பெண்ணொருத்தி பொற்கொடிபோலத் திகழ்ந்தாள். அவள், தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் புகழுடைய வடிவழகு உடையவள். குற்றமில்லாத அருந்ததியின் கற்பு அவளின் கற்பு ஆகும். அந்நகரப் பெண்களால் அவள் தொழுதேத்தப்படுபவள். சிறந்த பெருங்குணங்கள்மேல் காதலுடையவள். அப்பெண்ணின் பெயர் 'கண்ணகி' என்பதாம்.

## கோவலனது பெருநலம்

ஆங்கு ,
பெரு நிலம் முழுது ஆளும் பெருமகன் தலை வைத்த
ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்து ஓங்கு செல்வத்தான்;
வரு நிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான்;
இரு நிதிக் கிழவன் மகன் ஈர் - எட்டு ஆண்டு அகவையான்;
அவனும் - தான்,
மண் தேய்த்த புகழினான்; மதி முக மடவார் தம்
பண் தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டி,
'கண்டு ஏத்தும் செவ்வேள்' என்று இசை போக்கி, காதலால்
கொண்டு ஏத்தும் கிழமையான்; கோவலன் என்பான் மன்னோ.

*[ஆர்த்து - ஊட்டுதல்; மடவார் - இளமை; செவ்வேள் - முருகக் கடவுள்; கிழமையான் - உரிமை உடையவன்.]*

அப்புகார் நகரில், பெரிய நிலவுலகத்தை முழுவதும் தனியொருவனாக ஆளும் சோழமன்னனால் முதற்குடியாக வைத்து மதிக்கக்கூடிய குடிகளில்

உயர்ந்தோங்கிய செல்வத்தையுடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவன் அறநெறியால் பல வழிகளிலும் வரக்கூடிய தனது பெருஞ் செல்வத்தைப் பிறர்க்குக் கொடுத்து உதவக்கூடிய 'மாசாத்துவான்' என்னும் பெயர் கொண்டவன். மேலும் இருநிதிக் கிழவன் என்னும் சிறப்புப் பெயரும் உடையவன். அவ்வணிகனுக்குப் பதினாறு வயதில் ஒரு மகன் இருந்தான்.

அவன் தனது வள்ளன்மையால் பூமி குறுகும்படி வளர்ந்த பெரும்புகழுடையவன். மதிபோலும் முகமும் பாட்டின் இனிமையைத் தோற்றுப்போகும்படி செய்யும் மொழியையும் உடைய இளமகளிர் அவனைக் கண்டபொழுது அதனால் எழுந்த காதல் காரணமாக, "இவன் நம்போன்றவர்கள் கண்டு வணங்கத்தக்க முருகவேள்" என்று தமது தோழியர் சூழ்ந்த குழுவில் அவனைப் பாராட்டி, காதற்குறிப்புடன் வாழ்த்துமளவிற்குப் புகழுடையவன். 'கோவலன்' என்பது அவனுடைய பெயராகும்.

### திருமணச் செய்தியை அறிவித்தல்

அவரை,
இரு பெரும் குரவரும், ஒரு பெரு நாளால்,
மண அணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி,
யானை எருத்தத்து, அணி இழையார், மேல் இரீஇ,
மா நகர்க்கு ஈந்தார் மணம்.

*[குரவர் - பெரியோர்(பெற்றோர்); மணஅணி - திருமணக் கோலம்; எருத்தம் - கழுத்து; ஈந்தார் - அறிவித்தார்; மணம் - திருமணச் செய்தி ]*

மேற்கூறிய குணங்களைக் கொண்ட கோவலன் கண்ணகி இருவரையும் அவர்களது பெற்றோர்களாகிய இருபெருங் குரவரும், நல்லதொரு நாளில் திருமணம் செய்விக்க விரும்பினர். அங்ஙனம் எண்ணிய பின்பு யானை ஒன்றை அழகுபடுத்தி அதன் கழுத்தின் புறத்தே அமைத்திருந்த அம்பாரியில் அணிமணி பூண்ட மங்கள மகளிரை அமரச்செய்து, தாம் உறுதிசெய்த அத்திருமண நாளை மாநகரில் உள்ள மக்கட்கு அறிவித்து அழைப்பு விடுத்தனர்.

### கோவலன் கண்ணகி திருமணம்

அவ்வழி,
முரசு இயம்பின; முருடு அதிர்ந்தன;
முறை எழுந்தன பணிலம்; வெண்குடை

அரசு எழுந்ததோர்படி எழுந்தன;
அகலுள் மங்கல அணி எழுந்தது.
மாலை தாழ் சென்னி வயிர மணித் தூண்அகத்து,
நீல விதானத்து, நித்திலப் பூம் பந்தர்க் கீழ்,
வான் ஊர் மதியம் சகடு அணைய, வானத்துச்
சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்,
மா முது பார்ப்பான் மறை வழி காட்டிட,
தீ வலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னை!

*[முருடு - மத்தளம்; பணிலம் - சங்கு; அகலுள் - அகன்ற உள்ளிடம்(அதாவது அகநகர்); சென்னி - தலை உச்சி; விதானம் - மேற்கட்டி(Terrace); சகடு - உரோகிணி நட்சத்திரம்; சாலி - அருந்ததி நட்சத்திரம்; மறை - வேதம்.]*

அவ்விடத்தில், முரசுகள் முழங்கின; மத்தளங்கள் அதிர்ந்தன; சங்குகள் முறையாக ஒலி எழுப்பின; மேலும், வெண்கொற்றக்குடை முதலியன அரசன் நகர்வலம் வரும்போது எழுவதைப் போல மிகுதியாக எழுந்தன. இவற்றால் அப்புகாரினது அக நகர் எங்கும் திருமண விழாவின் அழகு தோன்றியது. மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட உச்சியினை யுடையதும் வயிரமணித் தூண்களையுடையதுமான நீலப்பட்டினாலாகிய பந்தல் அமைந்திருந்தது. அப்பந்தலின் கீழே......

வானில் தவழும் நிலவானது உரோகிணியைச் சேர்ந்த நன்நாளிலே, அருந்ததி நட்சத்திரத்தை ஒத்த கற்புடைய கண்ணகியை மாமுது பார்ப்பான் வேதநூல் முறைப்படி சடங்குகள் செய்து வழிகாட்ட கோவலன் கண்ணகியை மணந்து அவள் கையைப்பற்றி (பாணிக்கிரணம்) தீவலம் வந்தான். அவ்விருவரும் வலம்வரும் காட்சியைக் காண்பவர்கள் இக்கண்கள் முன்பு என்ன தவம் செய்தனவோ என்று சொல்லும்படி அக்காட்சி இருந்தது.

### மங்கல வாழ்த்தும் மங்கல அமளியில் ஏற்றுதலும்

விரையினர், மலரினர், விளங்கு மேனியர்,
உரையினர், பாட்டினர், ஒசிந்த நோக்கினர்,
சாந்தினர், புகையினர், தயங்கு கோதையர்,
ஏந்து இள முலையினர், இடித்த சுண்ணத்தர்,
விளக்கினர், கலத்தினர், விரிந்த பாலிகை
முளைக் குடம் நிரையினர், முகிழ்த்த மூரலர்,

போதொடு விரி கூந்தல் பொலன் நறுங்கொடி அன்னார்,
'காதலற் பிரியாமல், கவவுக் கை ஞெகிழாமல்,
தீது அறுக!' என ஏத்திச், சில் மலர் கொடு தூவி,
அம் கண் உலகின் அருந்ததி அன்னாளை
மங்கல நல் அமளி ஏற்றினார் – 'தங்கிய
இப்பால் இமயத்து இருத்திய வாள் வேங்கை
உப்பாலைப் பொன் கோட்டு உழையதா, எப்பாலும்
செரு மிகு சின வேல் செம்பியன்
ஒரு தனி ஆழி உருட்டுவோன்' எனவே.

*[விரை – நறுமணம்; ஒசிந்த – ஒதுங்கிய; சுண்ணம் – வாசனைப் பொடி; பாலிகை – முளைப்பாலிகை; நிரையினர் – நிரம்பினர்; மூரலர் – புன்சிரிப்பு; உப்பாலை – மேலே; செரு – போர்; ஆழி – ஆணைச் சக்கரம்.]*

கண்ணகியின் கையைப் பிடித்துக்கொண்டு கோவலன் வேள்வித் தீயை வலம்வந்து முடித்த பின்னர், அங்கே தளிரெனத் திகழும் மேனியை உடைய மங்கைப் பருவத்து மகளிர்கள் – நறுமணப் பொருட்களையும் மலர்த்தட்டுகளையும் தாங்கி உரையினராயும், பாட்டினராயும் உடன் நின்றனர்.

ஒதுங்கிப் பார்க்கும் பார்வையினை உடைய மடந்தைப் பருவத்து மகளிர்கள் – சாந்து, நறும்புகை, மலர்மாலை ஆகியவற்றை ஏந்தி நின்றனர்.

குழந்தை ஈன்றமையால் பால்சுரந்து தளர்ந்த இளமுலையினை உடைய அரிவைப் பருவத்து மகளிர்கள் – இடித்த சுண்ணப் பொடி, விளக்கு அணிகலன், முளைத்த பாலிகைக் குடங்கள் ஆகியவற்றைத் தாங்கி வந்தனர்.

இவர்களோடு தோன்றிய புன்முறுவலை உடைய தெரிவைப் பருவத்து மகளிர்களும் மலர்சூடித் தழைத்த கூந்தலைக் கொண்ட அழகிய பொற்கொடி போன்ற பேரிளம் பெண்டிரும் அம் மணமக்களைச் சூழ்ந்து நின்றனர். பின்பு, செம்முது பெண்டிர் எனப்படும் அப்பேரிளம் பெண்கள்,

# 11. பாத்திரம் பெற்ற காதை

மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்,
மணிபல் லவத்திடை மணிமே கலை – தான்
வெண்மணல் குன்றமும், விரிபூஞ் சோலையும்,
தண்மலர்ப் பொய்கையும், தாழ்ந்தனள் நோக்கி,
காவதம் திரிய – கடவுள் கோலத்துத்
தீவ திலகை செவ்வனம் தோன்றி,
கலம்கவிழ் மகளிரின் வந்துஈங்கு எய்திய
இலங்குதொடி நல்லாய் யார்நீ என்றலும்
எப்பிறப்பு அகத்துள், "யார்நீ" என்றது? 11
பொன் – கொடி அன்னாய்; பொருந்திக் கேளாய்;
போய பிறவியல், பூமி – அம் கிழவன்
இராகுலன் மனை,யான்; இலக்குமி என்பேர்;
ஆய பிறவியில், ஆடல் – அம் கணிகை
மாதவி ஈன்ற மணிமே கலை, யான்;
என்பெயர்த் தெய்வம் ஈங்குஎனைக் கொணர,இம்

மன்பெரும் பீடிகை என்பிறப்பு உணர்ந்தேன்;
ஈங்குஎன் வரவுஇது;ஈங்கு எய்திய பயன்இது;
பூங்கொடி அன்னாய்; யார்,நீ?' என்றலும் –

மணிமேகலா தெய்வம் மந்திரங்கள் அளித்துச் சென்ற பின்னர் மணிபல்லவத் தீவில் உள்ள வெண் மணற் குன்றுகளையும் பரந்த பூஞ்சோலைகளையும் குளிர்ச்சியான மலர்கள் நிறைந்த பொய்கை களையும் மணிமேகலை வியந்து பார்த்துக் கொண்டே ஒரு காததூரம் சென்றாள். அவள் முன்னால் தெய்வ மகளிர் வடிவுடைய தீவதிலகை என்னும் மங்கை ஒருத்தி தோன்றினாள். "ஒளி வீசும் வளையல் அணிந்த பெண்ணே! மரக்கலம் கவிழத் தப்பி வந்த ஒரு மகளைப் போல இத்தீவில் தனியாகச் சுற்றுகின்ற நீ யார்?" எனத் தீவதிலகை வினவினாள். "பொற்கொடி! என்னுடைய எந்தப் பிறப்பைக் குறித்து நீ யார் என வினாவினாய்? நான் கூறுவதைக் கவனமாகக் கேள். சென்ற பிறவியில் உலகாளும் மன்னன் இராகுலனின் மனைவி! என் பெயர் இலக்குமி! இப்பிறப்பில் நாடகக் கணிகை மாதவியின் மகள்! என் பெயர் மணிமேகலை! மணிமேகலா தெய்வம் என்னை இங்கு எடுத்து வந்தது. பெருமை பெற்ற இப்பீடிகையால் என் முற்பிறப்பு நிகழ்ச்சிகளை அறிந்தேன். இத்தீவிற்கு நான் வந்த வரலாறு இதுவே! இத்தீவில் நான் அடைந்த பயன் இதுவே! பூங்கொடி! நீ யார்?" என மணிமேகலை பதிலிறுத்து வினாவினாள்.

ஆய்-இழை தன்பிறப்பு அறிந்தமை அறிந்த
தீவ திலகை செவ்வனம் உரைக்கும்;
'ஈங்கு – இதன் அயல்அகத்து இரத்தினத் தீவத்து,
ஓங்குஉயர் சமந்தத்து உச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடிஇணை ஆகிய,
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குஉளது ஆதலின்
தொழுது வலம்கொண்டு வந்தேன், ஈங்கு;இப்
பழுதுஇல் காட்சிஇந் நல்மணிப் பீடிகை,
தேவர்கோன் ஏவலின், காவல் பூண்டேன்;
தீவ திலகை என்பெயர் – இதுகேள்.

மணிமேகலை தன் முற்பிறப்பு நிகழ்ச்சிகளை அறிந்தவள் என்று அவளியல்பை உணர்ந்த தீவதிலகை செவ்வனம் கூறுகின்றாள்: "மணிபல்லவத் தீவிற்கு அப்பால் இரத்தினத் தீவு

என்றொரு தீவு உள்ளது. அத்தீவில் சமந்தம் என்ற மிக உயர்ந்த மலை ஒன்று உண்டு. அம்மலையின் உச்சியில் அறக்கோட்பாடுகளை உரிமையாகிய புத்த தேவனின் இணையடிகள் இருக்கின்றன. அவ்வடிகள் பிறவியெனும் பெருங்கடலைக் கடத்துவிக்கும் அறமாகிய மரக்கலம் ஆகும். ஆதலால் அவ்வடிகளைத் தொழுது வலம் வந்து இத்தீவிற்கு வந்தேன். இந்திரன் ஏவலால் அந்நாள் முதல் குற்றமற்ற தோற்றமுடையதும் நன்மை பயப்பதும் ஆன இம்மணிப் பீடத்தை காவல் செய்து வருகிறேன். என் பெயர் தீவதிலகை!"

தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்அறம் பிறழா நோன்பினர்
கண்டு கைதொழுவோர்; கண்டதன் பின்னர்,
பண்டைப் பிறவியர் ஆகுவர், பைந்தொடி!
அரியர், உலகத்து; ஆங்கு – அவர்க்கு அறமொழி
உரியது, உலகத்து ஒருதலை யாக;
ஆங்ஙனம் ஆகிய அணி – இழை! இதுகேள்;
ஈங்குஇப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது,
மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி;
இருதுஇள வேனிலில், எரிகதிர் இடபத்து,
ஒருபதின் மேனும் ஒருமூன்று சென்றபின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும் –
ஆபுத் திரன்கை அமுதசுரபி எனும்
மாபெரும் பாத்திரம்; மடக்கொடி! கேளாய்;
அந்நாள் இந்நாள்; அப்பொழுது இப்பொழுது;
நின்னான்கு வருவது போலும், நேர் – இழை!
ஆங்கு – அதில் பெய்த ஆருயிர் மருந்து
வாங்குநர் கைஅகம் வருத்துதல் அல்லது,
தான்தொலைவு இல்லாத் தகைமையது ஆகும்;
நறுமலர்க் கோதை! நின்ஊர் ஆங்கண்
அறவணன் – தன்பால் கேட்குவை இதன்திறம்'
என்றுஅவள் உரைத்தலும் – இளங்கொடி விரும்பி,

"பசிய வளையலணிந்த மெல்லியலே! இப் பீடிகையின் பெருமையைக் கேட்பாயாக! அறத்திற்குத் தலைவனாகிய புத்தன்

முதன்மையாகக் கூறிய பெருமை மிக்க நல்லறத்தில் பிறழாத நோன்புடையவரே, இப்பீடிகையைக் கண்டு வணங்குவதற்குத் தகுதியுடையவர்! இப்பீடிகையைக் கண்டவுடன் அவர்கள் எல்லாம் முற்பிறப்பு நிகழ்ச்சிகளை அறிந்தவர் ஆவார். ஆனால், உலகோரனைவரும் அத்தகு பெருமை பெறுதற்கு அரிது; அவர்கள் அத்தன்மையைப் பெற்றால் உலகத்தில் அறமொழி கேட்பதற்குத் தகுதியுடையோர். அத்தன்மையைப் பெற்ற அணியிழையே! இதனைக் கேட்பாயாக! புகழ் மிக்க இப்பீடிகையின் முன்பாக அழகிய நீரையுடைய கோமுகி என்னும் பொய்கை இருக்கிறது. அழகிய குவளை மலர்களும் நெய்தல் மலர்களும் அப்பொய்கையில் கலந்து விளங்கும். இளவேனிற் பருவத்தில் ஞாயிறு இடபத்தில் உள்ள வைகாசித் திங்களில் கார்த்திகையை முதலாவதாக வைத்து எண்ணப்படுகின்ற இருபத்தியேழு நாள் நட்சத்திரங்களில் பதிமூன்று நட்சத்திரம் கழிந்த பின்னர், நடுவில் இருப்பதான விசாக நட்சத்திரம் வரும். அத் தூய நிறைமதி நன்னாளில் இப்பொய்கை யில் ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி என்னும் பெருமையுடைய பாத்திரம் புத்த தேவனுடன் பொருந்தித் தோன்றும். இளங்கொடியே! இன்றே அந்த நன்னாள்! இப்பொழுதே அமுதசுரபி தோன்றும்! நேரிழையே! அமுதசுரபி உன்னுடைய கையகத்தில் வரும் போலும். அமுதசுரபியில் இட்ட ஆருயிர் மருந்தாகிய உணவு பெறுவோர்க ளுடைய கையகம் நிரப்பி நிரப்பி வருத்துமேயன்றி, தான் அழி வில்லாது வளர்ந்துகொண்டே வரும் தன்மையுடையது. நறுமலர்க் கோதையே! உன்னுடைய புகார் நகரத்தில் வாழும் அறவண வடிகளிடத்தில் அமுத சுரபியின் வரலாற்றைக் கேட்பாயாக."

மன்பெரும் பீடிகை தொழுதனள் – வணங்கித்
தீவ திலகை – தன்னொடும் கூடி;
கோமுகி வலம்செய்து, கொள்கையின் நிற்றலும்;
எழுந்து வலம்புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழும்தகை மரபின் பாத்திரம் புகுதலும்;
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்தரை இன்றி மனம்மகிழ்வு எய்தி –
'மாரனை வெல்லும் வீர!நின் அடி,
தீநெறிக் கடும்பகை கடந்தோய்! நின்அடி,
பிறர்க்குஅறம் முயலும் பெரியோய்! நின்அடி,
துறக்கம் வேண்டாத் தொல்லோய்! நின்அடி,
எண்பிறக்கு ஒழிய இருந்தோய்! நின்அடி,

கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய்! நின்அடி"
தீமொழிக்கு அடைத்த செவியோய்! நின்அடி,
வாய்மொழி சிறந்த நாவோய்! நின்அடி,
நரகர் துயர்கெட நடப்போய்! நின்அடி,
உரகர் துயரம் ஒழிப்போய்! நின்அடி –
வணங்குதல் அல்லது, வாழ்த்தல்என் நாவிற்கு
அடங்காது!' என்ற ஆய்–இழை முன்னர் –

தீவதிலகை சிறப்பித்துக் கூறிய அமுத சுரபியைப் பெற மணி மேகலை விரும்பினாள். பெருமை சான்ற பெரிய பீடத்தைப் பணிந்து தொழுதாள்; தீவதிலகையுடன் கோமுகிப் பொய்கையை வலமாகச் சுற்றி வந்தாள்; பின்னர் அறக்கடவுளை எண்ணிக் கொள்கையோடு நின்றாள். தொழுதற்குரிய பெற்றி வாய்ந்த அமுத சுரபி வலம் புரிந்து நின்ற மணிமேகலையின் சிவந்த கைகளில் புகுந்தது. அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலையின் மனம் அளவிலா மகிழ்ச்சி அடைந்தது.

"மாரனை வென்ற வீரனே! தீய நெறிகளைக் கடும் பகையாகக் கருதி விலக்கியவனே! உலகோருக்கு அறப்பயன் உண்டாவதற்கு முயற்சி செய்யும் பெரியோனே! வீட்டுப் பேரின்பம் வேண்டாத பழம் பெரு புகழோனே! மற்றவர்களின் எண்ணங்கள் எட்ட முடியாமல் பிற்பட்டு நிற்க உயர்ந்த நிலைக்குச் சென்ற மேலோனே! மக்களுக்கு ஞானம் போதிக்கும் மெய்ஞ்ஞான வடிவோனே! தீயசொற்களைக் கேளாதிருக்க அடைத்த செவியோனே! உண்மையைக் கூறும் சிறந்த சொற்களை உடைய நாவோய்! நரகத்திலிருப்போரின் துன்பம் நீங்குமாறு நரகத்திற்குச் சென்ற அருளுடையோனே! நரகர்களின் துன்பம் நீங்கக் கருடனுக்கு அறம் போதித்த அறவோனே! உன் திருவடிகளை நான் வணங்கித் தொழ முடியுமே அல்லாமல் அவற்றை வாழ்த்திப் புகழ்தல் என் நாவிற்கு அடங்காது!" என்று மணிமேகலை உவகை பொங்க அன்பின் எழுச்சியோடு கூறினாள்.

போதி நீழல் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தி,
தீவ திலகை சேயிழைக்கு உரைக்கும்;
'குடிப்பிறப்ப அழிக்கும்; விழுப்பம் கொல்லும்;
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும்; மாண்எழில் சிதைக்கும்;
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்;

பசிப்பிணி என்னும் பாவி;அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது —

போதி மரத்தின் நிழலில் அமர்ந்து விளங்கும் புத்த தேவனின் திருவடிகளைத் தன்னுடைய குற்றம் நீங்குமாறு தொழுது போற்றிய பின்னர் தீவதிலகை மணிமேகலையிடம் கூறினாள்.

"பிசிப்பிணி என்னும் பாவி தான் பற்றியவருடைய உயர்குடிப் பிறப்பை அழிக்கும்; சிறந்த புகழைக் கெடுக்கும்; பிறவிக் கடலைக் கடப்பதற்குப் பற்றுக் கோடாகக் கொண்ட கல்வியாகிய பெரிய தெப்பத்தை நீக்கும்; நாணாகிய அணியை நீக்கும்; பூண் விளங்கு கின்ற முலைகளையுடைய மகளிரோடு பிறருடைய வீட்டுப் புறங் கடையில் நிறுத்தும். இத்தகைய கொடுமைகளைச் செய்யும் பிசிப்பிணியை ஒழித்தவர்களுடைய புகழை அளவிட்டுக் கூறுவதற்கு என் நா எழாது!

புல்மரம் புகையப் புகைஅழல் பொங்கி,
மன்உயிர் மடிய மழைவளம் கரத்தலின்;
அரசுதலை நீங்கிய அருமறை அந்தணன்,
இருநில மருங்கின் யாங்கணும் திரிவோன்,
அரும்பசி களைய ஆற்றுவது காணான்,
திருந்தா நாய்ஊன் தின்னுதல் உறுவோன்,
இந்திர — சிறப்புச் செய்வோன் முன்னர்,
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளம் தருதலின், மன்உயிர் ஓங்கி,
பிழையா விளையுளும் பெருகியது அன்றோ? —
ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம்விலை பகர்வோர்;
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்;
மேற்றே, உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;
உயிர்க்கொடை பூண்ட உரவாய் ஆகி,
கயக்குஅறு நல்அறம் கண்டனை' என்றலும் —

"முன்னொரு காலத்தில் புல்லும் மரமும் புகைந்து கரியாகப் போக எழும் அனல் போல வெம்மை மிகுந்து நிலையான உயிர்கள் மடிந்து போகுமாறு மழை வளம் வற்றியது. அதனால் அரசாட்சியைத் துறந்து அரிய மறைகளை அறிந்துணர்ந்து அந்தணனாக மாறிய விசுவாமித்திர முனிவன் இப்பேருலகில் எல்லா இடங்களிலும்

சுற்றினான். ஒரு நாள் அவனுடைய கடுமையான பசியைப் போக்க உணவு ஒன்றும் கிடைக்கப் பெறாமல் சிறிதும் தகுதியற்ற நாயின் ஊனைத் தின்னத் தொடங்கினான். உணவு உண்ணுவதற்குமுன் செய்ய வேண்டிய தேவ பலியீடு செய்தான். அதனால் வானவர்க் கரசன் இந்திரன் மகிழ்ச்சியடைந்தான்; அம்முனிவன் முன்னர்த் தோன்றினான்; மழைச் செல்வத்தை அளித்து மறைந்தான். அதனால் நிலையான உயிர்களும் பிழையாத விளைச்சல் பொருட் களும் மிகுந்து பெருகின. மேலும் தங்களுடைய பொருள் வளத்தால் பசிப்பிணியை நீக்கிக் கொள்ள வண்மையுடைய அல்லது உதவி செய்தோருக்குக் கைமாறு செய்யும் வலிமையுடைய செல்வருக்கு உணவு அளிக்கின்றவர்கள் அறத்தை விலைகூறி விற்கும் பண்புடை யோராவர். எவ்வாற்றானும் தம்முடைய பசிப்பிணியை நீக்க இயலாத வறிஞர்களுடைய நீக்குவதற்கரிய பசியைக் களைவோரின் குறிப்பின் வழி நிற்பதே உலகின் உண்மை நெறியாகிய வாழ்க்கை. அணுக்கள் செறிந்த உலகில் வாழ்வோர் அனைவரிலும் பிறர்க்கு உணவு அளித்துப் பாதுகாத்தவரே உயிர் கொடுத்தோராவார். உயிர் காக்கும் கொடைத் திறத்தை மேற்கொள்! சிறந்த அறிவு பெற்றவளாய்க் கலக்கமில்லாத நல்லறத்தைச் செய்!"

**'விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்**
**திட்டி விடம்உணச் செல்உயிர் போவுழி,**
**உயிரொடு வேவேன் உணர்வுஒழி காலத்து,**
**வெயில்விளங்கு அமயத்து, விளங்கித் தோன்றிய**
**சாது சக்கரன் – தனையான் ஊட்டிய**
**காலம் போல்வதோர் கனாமயக்கு உற்றேன்;**
**ஆங்கு – அதன் பயனே ஆர்உயிர் மருந்துஆய்,**
**ஈங்கு,இப் பாத்திரம் என்கைப் புகுந்தது**

தீவதிலகை கூறியதைக் கேட்ட மணிமேகலை "சென்ற பிறவியல் என் அன்புக் காதலன் இராகுலன் திட்டிவிடம் என்னும் பாம்பினால் தீண்டப்பெற்று உயிர் துறந்த பொழுது, நான் தீயிர் குளித்து உயிரோடு வெந்து என்னுடைய உணர்வு என்னை விட்டு நீங்கும் பொழுது, முன்பொருநாள் வெயில் லிளங்குகின்ற சாதுசக்கரனை நான் உண்பித்து நிகழ்ச்சியைப் போன்ற ஒரு கனவு தோன்றி மயக்கமடைந்தேன். உயிர் உடம்பிலிருந்து நீங்குங் காலத்தில் எதை ஒன்றை மனம் எண்ணுகின்றதோ அதன் பயனை அடுத்த பிறவியில் அடையும் என்ற கொள்கைப்படி அந்தக் கனவாகிய நினைவின்

பயனே இப்பிறவியில் ஆருயிர்க்கெல்லாம் உணவாகிய மருந்தளிக்கும் அமுதசுரபி இங்கு என் கையில் புகுந்தது போலும்!"

**நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து,**
**வித்தி, நல்அறம்; விளைந்த அதன்பயன்**
**துய்ப்போர் – தம்மனை – துணிச்சிதர் உடுத்து;**
**வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி;**
**வெயில்என முனியாது, புயல்என மடியாது,**
**புறங்கடை நின்று, புன்கண் கூர்ந்து,முன்**
**அறங்கடை நில்லாது, அயர்வோர் பலரால்**
**ஈன்ற குழவி முகம்கண்டு இரங்கி,**
**தீம்பால் சுரப்போள் – தன்முலை போன்றே,**
**நெஞ்சு வழிப்படூம்உம் விஞ்சைப் பாத்திரத்து**
**அகன்சுரைப் பெய்த ஆருயிர் மருந்துஅவர்**
**முகம்கண்டு சுரத்தல் காண்டல்வேட் கையேன்'என**

"பெரிய நாவல் மரம் மிகுதியாக உடைய மாபெரும் சம்புத்தீவில் முற்பிறப்பில் செய்த தீவினையால் கந்தல் உடைகளை உடுத்திக் கொண்டு வயிற்றைக் காய்கின்ற கொடியபசி பெருகுவதால் வருந்தி, வெயில் என்பதால் வெறுப்படையாமலும், மழை என்பதால் சோர்வடையாமலும் சுற்றி ஓரிடத்தில் நில்லாமல் அயர்ந்து மிக்க துன்பமடையும் வறிஞர்கள், நல்லறங்களை விதைத்து அதனால் விளைந்த பயனாகிய செல்வத்தைத் துய்க்கும் செல்வருடைய வீடுகளின் தலைவாயில் நின்று இரப்போர் பலர் வாழ்கின்றனர். ஈன்றெடுத்த குழந்தையின் முகத்தைக் கண்டு இரங்கி இனிய பாலைச் சுரக்கின்ற தாயின் முலையைப் போல மனத்தில் எண்ணியவாறு சுரக்கும் விஞ்சையையுடைய இவ் அமுதசுரபியின் அகன்ற குழியிடத்தில் இட்ட உணவு அந்த வறியோர்களின் முகத்தைக் கண்டு சுரப்பதைக் காண விரும்புகின்றேன்," என்று மணிமேகலை கூறினாள்.

**மறந்தேன் அதன்திறம்; நீஎடுத்து உரைத்தனை;**
**அறம்கரி யாக அருள்சுரந்து ஊட்டும்**
**சிறந்தோர்க்கு அல்லது செவ்வனம் சுரவாது;**
**ஆங்ஙனம் ஆயினை; அதன்பயன் அறிந்தனை;**
**ஈங்குநின்று எழுவாய்' என்று,அவள் உரைப்ப –**
**தீவ திலகை – தன்அடி வணங்கி,**

**மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்தி,**
**கோமகன் பீடிகை தொழுது,வலம் கொண்டு,**
**வானூடு எழுந்து, மணிமே கலை – தான்**

"ஆ! அமுதசுரபியின் இயல்பை மறந்து விட்டேன்! அதன் திறத்தை நீ எடுத்துரைத்தாய். 'வறியோர் துன்பங் கண்டவிடத்துப் பிறருக்குத் தெரியாமல் அறமே சான்றாக அமுதசுரபியானது அருள்சுரந்து உண்பிக்கும்; உயர்ந்தோர்க்குச் சுரக்கும்; மேன்மக்களுக்குச் செல்வனம் சுரக்காது; அவ் அமுதசுரபியின் இயல்புடையாயினை; அதன் பயனை அறிந்தவளாயினாய். இவ்விடத்திலிருந்து உன்னுடைய ஊருக்கு எழுவாயாக!" என்று தீவதிலகை கூறினாள். தீவதிலகையைத் தொழுது வணங்கி, பெருமையுடைய அமுதசுரபியை மலர்க்கரத்தில் ஏந்தி, புத்ததேவனின் பீடத்தை வலம் வந்து தொழுத பின்னர் மணிமேகலை வானில் எழுந்து சென்றாள்.

**'வழுஅறு தெய்வம் வாய்மையின் உரைத்த**
**எழு – நாள் வந்தது; என்மகள் வாராள்;**
**வழுவாய் உண்டு!'என மயங்குவோள் முன்னர் –**
**வந்து தோன்றி, அவர்மயக்கம் களைந்து,**
**அந்தில் அவர்க்குஓர் அற்புதம் கூறும்;**
**'இரவி வன்மன் ஒருபெரு மகளே!**
**துரகத் தானைத் துச்சயன் தேவி!**
**அமுதபதி வயிற்று அரிதின் தோன்றி,**
**தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்**
**அவ்வையர் ஆயினீர்; நும்அடி தொழுதேன்;**

"தவறுதல் இல்லாத மணிமேகலா தெய்வம் உறுதியாய்க் கூறிய ஏழாம் நாள் வந்ததே! என் மகள் இன்னும் வரவில்லையே! தவறுதலும் உண்டோ?" என்று மாதவி உள்ளங் கலங்கி இருந்தாள். அவள் முன்னர் மணிமேகலை தோன்றினாள். அவர்களுடைய கலக்கம் நீங்கியது. அந்த இடத்திலேயே அவர்களுக்கு ஓர் அற்புதமான செய்தியைக் கூறுவாள்போல், "இரவிவன்மனின் இணையற்ற பெரிய மகளே! குதிரைப் படையுடைய துச்சயனின் துணைவியே! என் தாய் அமுதபதியின் வயிற்றில் அருமையாகப் பிறந்து, எனக்குத் தமக்கையராகிய தாரையும் வீரையும் நீங்கள்தான்! நீவிர் இருவரும் இப்பிறப்பில் என்னுடைய தாயர் ஆயினீர்! உங்கள் திருவடிகளை வணங்குகிறேன்!" என்றாள்.

வாய்வ தாக, மானிட யாக்கையில்
தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்கு,ஈங்கு;
அறவண அடிகள் – தம்பால் பெறுமின்.
செறிதொடி நல்லீர்! உம்பிறப்பு; ஈங்கு – இஃது
ஆபுத் திரன்கை அமுத சுரபி எனும்
மாபெரும் பாத்திரம்; நீயிரும் தொழும்!' என –
தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்,
'பழுதுஅறு மாதவன் பாதம் படர்கேம்;
எழுக'என எழுந்தனன் – இளங்கொடி – தான் என்.

"மனிதப் பிறவியில் தீவினைகளை அறுக்கவல்ல சிறந்த தவம் உமக்கு அமைவதாக! செறிவளையணிந்த மடந்தையரே! உங்கள் வரலாற்றை அறவணவடிகளிடமிருந்து அறிவீராக! என் கையில் உள்ள இந்த ஐயக்கடிஞை ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி என்னும் மிக்க பெருமையுடைய பாத்திரமாகும். நீங்கள் இதனைத் தொழுவீராக!" என்று மணிமேகலை மேலும் கூற மாதவி, சுதமதி அத்தெய்வக் கடிஞையைத் தொழுது வணங்கிப் போற்றினர். "மாசற்ற மாண்புமிக்க தவமுடைய அறவண அடிகளை வணங்குவதற்குச் செல்வேன்! நீவிரும் வருக!" என்று இளங்கொடி கூறினாள்! மணிமேகலையுடன் மாதவியும் சுதமதியும் எழுந்து சென்றனர்.

## வாலியின் எதிர்மொழி

337. பிழைத்த தன்மை இது எனப் பேர் எழில்
தழைத்த வீரன் உரைசெய தக்கிலாது
இழைத்த வாலி இயல்பு அல இத் துணை
விழைத் திறம் தொழில் என்ன விளம்புவான்.

338. ஐய நுங்கள் அருங் குலக் கற்பின் அப்
பொய் இல் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சிபோல்
செய்திலன் எமைத் தேமலர் மேலவன்
எய்தின் எய்தியது ஆக இயற்றினான்.

337. "நீ செய்த தவற்றின் தன்மை இதுவாகும்" என்று மிக்க அழகுடைய இராமன் கூறினான். தகாத செயலைச் செய்த வாலி, "தகாதவை என்று நீ சொன்ன இவ்வளவும் வானரமான எங்கட்கு உரியவை அல்ல! விரும்பியபடி தொழில் செய்வதே எங்கள் பிறப்புக்குரியதாகும்," என்று கூறி மேலும் சொல்லலானான்.

338. "ஐயனே! உங்களது அரிய குலத்தில் தோன்றிய கற்பகத்தை முக்கியமாகக் கொண்ட பொய்மையில்லாத அம்மங்கையர்க்குப் பொருந்திய, மணத்தைச் செய்து கொண்டு அவரையே கலத்தல்போல எங்கட்கு நான்முகன் நியமிக்கவில்லை. நேர்ந்த போது நேர்ந்தபடியாகுமாறு நியமித்தான்.

[illegible]

[illegible]

## இராமன் மறுப்புரை

341. நலம் கொள் தேவரின் தோன்றி நவை அறக்
கலங்கலா அற நல் நெறி காண்டலின்
விலங்கு அவாமை விளங்கியது ஆதலால்
அலங்கலார்க்கு ஈது அடுப்பது அன்று ஆம் அரோ.

342. பொறியின் யக்கையதோ புலன் நோக்கிய
அறிவின் மேலது அன்றோ அறத்தாறுதான்
நெறியும் நீர்மையும் நேரிது உணர்ந்த நீ
பெறுதியோ பிழை உற்றுழி பெற்றிதான்.

343. மாடு பற்றி இடங்கர் வலித்திட
கோடு பற்றிய கொற்றவற் கூயது ஓர்
பாடு பெற்ற உணர்வின் பயத்தினால்
வீடு பெற்ற விலங்கும் விலங்கு அரோ.

339. "பகைவர் உடலின் நிணமும் நெய்யும் கொண்ட சக்கரப்படையை உடையவனே! உள்ளம் போன வழியே நடப்பது எங்களுக்கு உள்ளனவே அல்லாமல் வேத முறைப்படி மணங்களும் இல்லை! பரம்பரைக்கு ஒத்த நற்பண்பும் இல்லை!

340. "என்னை வென்றவனும் இயல்பிலே வெற்றி பெறுபவனுமானவனே! எங்கள் குலத்துக்குரிய பண்பு இதுவாகும். நான் பெற்றுள்ள சாதியின் தன்மைப்படி ஒரு குற்றத்தையும் செய்யவில்லை. அதை நீ உள்ளத்தில் கொள்வாயாக!" என்று வாலி கூறினான். அத்தகைய சொற்களுக்கு இராமன் சமாதானம் கூறலானான்.

341. "நீங்கள் தேவர்களுக்கு மக்களாகப் பிறந்தீர்கள். குற்றம் இல்லாதபடி சிறந்த அறவழியை நன்கு நிலை கலங்காமல் அறிந்துள்ளீர்கள். ஆதலால் சாதாரண விலங்கினத்தைச் சார்ந்தீர் இல்லை என்பது விளங்கியது. ஆதலால் வெற்றிக்குரிய மாலையைத் தாங்கிய வீரர்கட்கு இது தகுதியுடையதாகாது.

342. "அறவழிதான் ஐம்பொறிகட்கு இடமான உடலைப் பற்றியதோ! அது ஆராய்ந்து அறியும் அறிவைப் பற்றியதன்றோ! நல்ல நெறியையும், அதன் தன்மையையும் உணர்ந்த நீ பிழைகளைச் செய்துவிட்டு நான் செய்தது பிழையன்று; தக்கதே" என்று சாதிக்கின்ற தன்மையைப் பெற்றுள்ளாயோ!

343. "முதலை, தன்னை ஒரு பக்கத்தில் பிடித்துக் கொண்டு இழுத்ததால் சங்கினை ஒரு கையில் கொண்ட திருமாலை அழைத்திட, அதன் விளைவாக ஒப்பில்லாத பெருமை கொண்ட அறிவால் அத்துன்பத்தினின்று நீங்கி வீடு பேறு பெற்றதன்றோ? அந்த யானையும் விலங்கு இனத்தைச் சார்ந்ததாகுமோ!

344. சிந்தை நல் அறத்தின் வழிச் சேறலால்
பைந் தொடித் திருவின் பரிவு ஆற்றுவான்
வெந் தொழில் துறை விடு பெற்று எய்திய
எந்தையும் எருவைக்கு அரசு அல்லனோ.

345. நன்று தீது என்று இயல் தெரி அறிவு
இன்றி வாழ்வது அன்றோ விலங்கின்இயல்
நின்ற நல் நெறி நீ அறியா நெறி
ஒன்றும் இன்மை உன் வாய்மை உணர்த்துமால்.

346. தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின் நெறி
புக்கவேல் அவ் விலங்கும் புத்தேளிரே.

347. காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்
பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால்
மாலினால் தரு வன் பெரும் பூதங்கள்
நாலின் ஆற்றலும் ஆற்றுழி நண்ணினாய்.

348. மேவ அருந் தருமத் துறை மேவினார்
ஏவரும் பவத்தால் இழிந்தோர்களும்
தா அருந் தவரும் பல தன்மை சால்
தேவரும் உளர் தீமை திருத்தினார்.

344. "அறவழியிலே உள்ளம் சென்றதால், பசிய வளையல் அணிந்த திருமகளைப் போன்ற சீதையின் துன்பத்தைத் தீர்த்தற் பொருட்டாகக் கொடிய போர்த் துறையில் தன் திறமையைக் காட்டி இவ்வுலகத்தினின்று விடுதலைப்பெற்ற, எம் பெரிய தந்தையான சடாயுவும் கழுகுகளுக்கு மன்னன் அன்றோ!

345. "விலங்கின இயல்பு இது நல்லது, இது தீயது என்று அதனதன் இயல்பை உள்ளவாறு அறிகின்ற பகுத்தறிவு இல்லாது வாழ்வதன்றோ! நிலைபெற்ற நல்லற நெறிகளுள் நீ அறியாத வழி ஒன்றுமில்லை என்பதை நின் வாயினின்று இப்போது வெளிப்பட்ட மொழிகளே உணர்த்தும்.

346. "எல்லா உயிர்களுள்ளும் சிறந்த மனிதர்களாயினும் தகுதியானவை இவை, தகுதி இல்லாதவை இவை என நீதி நூல் முறைக்கு ஏற்ப ஒண்ணாதவராயின் அவர்கள் விலங்குகளே! விலங்குகளே ஆயினும் மனுநீதி நூலில் கூறப்பட்டுள்ள முறைமையில் பொருந்தி நடந்தால் அவை தேவர்களே!

347. "இயமனின் வன்மையை அழித்து அவனை வென்ற மழு என்னும் ஆயுதத்தையுடைய சிவபெருமானிடம் நீ செய்த பக்தி பயன் தந்ததால், திருமாலால் படைக்கப்பட்ட வலிய பெரிய பூதங்கள் நான்கிற்கும் உள்ள வன்மைகளை யெல்லாம் உன் வன்மையுடன் பெற்றுள்ளாய்!

348. "இவ்வுலகத்தில் குற்றமுடையவர்களாய் இருந்தவர்களிலும், பிறவியால் தாழ்ந்தவர்களிலும் அறவழியில் சேர்ந்து நடந்தவர் உண்டு. அங்ஙனமே, குற்றம் இல்லாத தவத்தைச் செய்த முனிவர்களிலும், பல்வகைக் குணங்களில் சிறந்த தேவர்களிலும் தீயவை செய்தவர் உண்டு.

**349.** இனையது ஆதலின் எக் குலத்து யாவர்க்கும்
வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்
அனைய தன்மை அறிந்தும் அழித்தனை
மனையின் மாட்சி என்றான் மனு நீதியான்.

349. "உண்மை இவ்வாறுள்ளது; ஆதலால் எந்தக் குலத்தில் தோன்றியவர்க்கும் உயர்வும் இழிவும் அவரவர் செய்த வினைகளாலேயே வரும். இதனை உணர்ந்திருந்தும் பிறன் மனைவியின் கற்பை அழித்தாய்" என்று மனு நூலில் சொன்னபடி அறநெறி தவறாது நடப்பவனான இராமன் கூறினான்.

1. தோடு உடைய செவியன் விடை ஏறி ஓர் தூ வெண் மதி சூடிக்
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரான் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடு உடைய பிர மாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. 1

**பொ.ரை.**

தோடு என்னும் செவிக்கு அணியும் அணியை அணிந்துள்ள உமையம்மையை, இடப்பக்கம் கொண்ட சிவபிரான் இடப வாகனத்தில் ஏறி, தூய்மையான வெண்மதியைச் சூடி, திருவெண்ணீறு பூசிய திருமேனி பொலிய விளங்குமவர் என் உள்ளம் கவர் கள்வாராவர். அப்பிரான் நான்முகனின் வழிபாட்டினை ஏற்று அருள்செய்தவர். அவரே எனக்குக் காட்சி தந்தவர்! அவரே இவராவர்.

**விளக்கம் :**

சம்பந்தர் பெருமான் மயங்கவும், உள்ளத்தைக் கவரவும் இருந்தமையைக் காண்போம்.

முன்பே வெண்மை வண்ணத்தையும் சத்துவகுணத்தையும் கண்டோம். விடை, வெண்மதி, உடம்பிலே பூசிய வெண்மையான நீறு, இந்த வெண்மைகளே பெருமானை மயக்கியும் உள்ளத்தைக் கவரவும் செய்தன.

'தோடுடைய செவியன்' என்று தொடங்குகின்றார். மங்கை பங்கனாக விளங்கும் பெற்றியர் சிவனார். மாதிருக்கும் திருக்கோலம். சக்திவேறு, சிவன் வேறல்ல; இரண்டும் ஒன்றிய அருட்பெருங் கோலமே அர்த்தநாரீச்வர வடிவம். இடப்பக்கம் தோடு; வலப்பக்கம் குழை. இத்திருக்கோலத்தை மணிவாசகர் 'தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்' என்பார்.

4. சங்க வெண்குழைச் செவியின் தண்மதி சூடிய சென்னி
அங்கம் பூண்என உடைய அப்பனுக்கு அழகிய ஊராம்
துங்க மாளிகை உயர்ந்த தொகுகொடி வானிடை மிடைந்து
வங்க வாள்மதி தடவும் அணிபொழில் காழிநன் னகரே. 4003

**பொ.ரை**

சங்காலான வெண்குழையை பெருமான் செவியில் கொண்டவன். தண்ணார் மதியை சடைமுடியில் அணிந்தவன்; எலும்பு மாலையை அணிகலனாகப் பூணுபவன்; தந்தையாக விளங்குபவன்; அத்தகைய பிரானுக்கு இடமாகத் திகழும் அழகிய ஊரானது நெடிய மாளிகைகளும் உயர்ந்த கொடிகளும் வானில் விளங்கும் வெண்பிறையையைத் தழுவும் பொழிலும் மேவும் காழி எனும் நல்நகரேயாம்.

# 222. (2) திருநல்லூர்ப் பெருமணம்
## (பொதுத் திருப்பதிகம்)

**பதிக வரலாறு :**

'கல்லூர்ப் பெருமண்' திருப்பதிகம் பாடி முடித்தவுடன் சிவனார் விண்ணொலியாக நீயும் நின் மனைவியும் உன் திருமணத்தைக் காண வந்தோர் அனைவரும் இந்தச் சோதியின் வழியே வந்து நம்மை அடையுங்கள்' என அருளிச் செய்து திருக்கோயிலின் உள் மேலோங்கிய சுத்தசோதி வடிவமாகி அச்சோதிக்கு ஒரு திருவாயிலை வகுத்துக் காட்டியருளினார். சோதி அருபனாய் நின்ற பிரானைப் பிள்ளையார் துதித்து வழிபட்டு சோதியுனுள் செல்லும் வழியை நெறிப்படுத்தி அனைவரும் மெய்ஞ்ஞானம் பெறவேண்டி இப்பதிகத்தைப் பாடி யருளினர். திருமணம் காண வந்தோரும் பிறர் எவராயினும் இச்சோதி யுனுள் செல்லுங்கள் எனக் கூறிட திருநீலநக்கர், முருக நாயனார், சிவபாத இருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலியோரும் அவர்கள் சுற்றத்தார்களும் புகுந்தார்கள். பிள்ளையாரின் முத்துச் சிவிகை முதலியவற்றைத் தாங்கி வந்தவர்களும், சைவர், பாசுபதர், மகாவிரதர், காளாமுகர், வாமர், வைரவர் என்று அறுவகைக் உட்சமயிகளும், வைதீக சைவர்கள், சைவசிந்தாதிகள் போன்றோர் அனைவரும் புகுந்தனர். இறுதியில் திருஞானசம்பந்தப் பெருமானார் தாம் கைப்பிடித்த காரிகையின் கையைப்பற்றிக் கொண்டு சோதியை வலம் வந்து அதனுள் புகுந்து சிவசாயுச்சியம் அடைந்தார். சோதியும் மறைந்தது.

(தேவாரம் அருளிய சமயக் குரவர்கள் மூவரும் நமச்சிவாயப் பதிகம் பாடியுள்ளார்கள். இம்மூன்று பதிகங்களையும் நித்தமும் பாராயணம் செய்க. பிரதோஷ காலங்களில் அவசியம் பாராயணம் செய்க. எண்ணியது கிட்டும். நலம்பெறும், நலிவு நீங்கும்; இன்னலும் இடரும் ஓடும்; இன்பம் மீதூரும் வறுமை விலகும்; வளம் செழிக்கும்.)

திருமுறை 3-307     பண் : கௌசிகம்     பெரிய புராணம் 1247

திருச்சிற்றம்பலம்

1. காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 4137

**பொ.ரை**

மிக அன்புகொண்டு கசிந்து கண்களின்று நீர்மல்க ஓதுகின்றவர்களை நன்னெறிக்கு உய்த்து அருளும் மிகச் சிறப்புடையது பெருமானின் திருப்பெயரான ஸ்ரீபஞ்சாட்சரம் எனப்படும் நமச்சிவாய எனும் திருவைந்தெழுத்தாம்.

**விளக்கம் :**

திருவைந்தெழுத்தினை ஓதும் முறை உணர்த்தப்பட்டது. எப்படிச் சொல்ல வேண்டும்? காதலாகி போதுமா? இல்லை கசிந்து கண்களின் ஆனந்தக் கண்ணீர் சொரியக் கூற வேண்டும். கூறினால் அது நம்மை நல்ல வழிக்கே திரும்பும். அவ்வெழுத்துக்கள் எங்குள்ளன? நான்மறையினின்றும் எடுக்கப்பட்டன; அல்ல அம்மறைகளின் மெய்ப் பொருளே அதுதான்? அது எச்சொல்; நமச்சிவாய என்ற ஐந்தெழுத்துச் சொல். அதுவே ஸ்ரீ பஞ்சாட்சரம்; திருவைந்தெழுத்து.

2. நண்ணியார் சேயார் நல்லார்தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்கு 1447
அணியான் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்.

**பொ.ரை**

திருவாரூருக்கு அருகிலுள்ளாரும், தொலைவிலுள்ளாரும் நல்லோரும், தீயோரும் நாடோறும் திருவாரூர் திருக்கோயில் புகுந்து பெருமானைப் போற்றி 'எமக்குற்ற பிணியைத் தீர்த்தருள்வாய்' என்று பெருகிக் காணும் கூட்டம் மணியே! பொன்னே! மைந்தா! மணாளா! என்று அழைப்பர். இங்ஙனம் ஏத்தும் அடியார்களுக்கு அணியனாகி அருள் பாலிப்பவன் ஆரூரீசன். இஃது ஆதிரைத்திருநாளில் நிகழ்வதொரு நிகழ்ச்சி.

**விளக்கம் :**

ஆரூருக்கு அருகிலுள்ளார் நணியார்; தொலைவிலுள்ளார் சேயார். ஆரூருக்கு அண்மையிலிருந்தும் ஆரூரின் அடியைப் பேணாதார் சேயார், தீயார். ஆரூருக்குத் தொலைவிலிருந்தாலும் பெருமானின் பாதக மலத்தைப் பற்றி வாழ்வோர் நணியார், நல்லார் எனவும் பொருள் கூறுவர். ஏற்பது கொள்க.

திருச்சிற்றம்பலம்

1. பித்தாபிறை சூடீபெரு
மானேஅரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத்(து) உன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட் டுறையுள்
அத்தாஉனக்(கு) ஆளாய்இனி
அல்லேன்எனல் ஆமே. 1

(பொழிப்புரை) பித்தனே! பிறையணிந்தவனே! பெருமையுடையவனே! அருளாளனே! என் மனத்துள் எவ்வகையாலும் மறவாது உன்னை வைத்தாய்! பெண்ணையாற்றின் தென்திசையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரில் 'அருள்துறை'

என்னும் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள அத்தனே! முன்பே உனக்கு அடிமையாகி இப்பொழுது 'உனக்கு அடிமை அல்லன்' எனக் கூறுவது நன்றோ!

(குறிப்புரை) எத்தால்-எவ்வகையாலும்; அருள்துறை - திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவாலயம்; அத்தன் இறைவன்.

# 51. அச்சோப் பதிகம்

*(தில்லையில் அருளியது)*

நெறிஅல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறிஒன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தைஎனக்கு
அறியும்வண்ணம் அருளியஆறு ஆர் பெறுவார்? அச்சோவே! 2

நன்னெறியல்லாத வழியை நன்னெறி என்று எண்ணுகின்ற அடியேனைக் கீழ்ப்பட்ட வழிகளைப் பற்றாமல் அழகாகிய அருளையே அடையும் விதம் அடையாளம் யாதொன்றும் இல்லாத கூத்தப்பிரானது நடனத்தை அடியேனுக்குத் தெரிந்து கொள்ளும் விதத்தைக் கிருபை செய்த விவரத்தை வேறு யார் பெற வல்லார்? இஃது அதிசயம்!

6. நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடயெம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.

(பொ-ரை.) திருவெண்ணீறு அணிந்த பவள மலைபோல்வனே! நிலைபெற்ற நெற்றியில் தீக்கண்ணை உடையவனே! வெவ்வேறாகிய அழகிய உலகங்களும் போகப் பொருளுமாய் இருப்பவனே! யோக முதிர்ச்சியில் விளையும் இன்பப் பெருக்கே! மேரு மலையை வில்லாக ஏந்தியவனே! கங்கையாற்றைச் சடை முடியில் கொண்ட அற்புதக் கூத்தனே! அழகிய பொன்னால் செய்யப்பட்ட பொன்னம்பலத்தில் திருநடனமிடும் அரசே! அழகிய இடபக்கொடியையுடைய எம் இறைவனே! உன்னைத் தொண்டனாகிய அடியேன் புகழ்ந்து கூறுமாறு அருள்வாயே!

## திருவடிப் புகழ்ச்சி

போற்றி என்பார் அமரர் புனிதன்அடி
போற்றி என்பார் அசுரர் புனிதன்அடி
போற்றி என்பார் மனிதர் புனிதன்அடி
போற்றி என்அன்புள் பொலிய வைத்தேனே. 44

தேவர்கள் சிவபெருமான் திருவடியைப் போற்றி போற்றி என்று பாடித் துதிப்பார்கள். பெருமானின் புனிதத் திருவடியை அசுரர்களும் போற்றி போற்றி என்று பரவித் துதிப்பார்கள். மண்ணுலக மாந்தர்கள் சிவன் சேவடியைச் சிவசிவ போற்றி என்று வணங்குவார்கள். நானும் பரமனைப் போற்றிப் புகழ்ந்து என் அன்பு மனத்துள்ளே விளங்க வைத்தேன். புனிதன் - தூயவன். மலமில்லாத நிர்மலன். பொலிதல் - விளங்குதல். அருள் வழங்கும் ஞானத்தின் குறியீடு. திருவடிகள் - இறைவன் பொற்பாதங்கள். எனவே திருவடிப் புகழ்ச்சி - போற்றி என்பது வழிபாட்டின் முதல் படி - மூலப் பகுதி. திருவாசகம் - சிவபுராணம், திருவடிப் புகழ்ச்சியின் தேனமுதம்.

20. அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந்தானே அவன். 63

**பொ.ரை**

இறைவன், எல்லாவற்றையும் அறிவானும், அதனை அறிவிப்பானும், அறிவாகவும், அறிகின்றவனாகவும், அதை அறிய மெய்ப்பொருளாக இருப்பவனும் அவனே! விரிந்த சுடர், பூமி, விண், என அப்பொருள்களும் அவனே.

இதனால் எண்வகை முறை கூறப்பட்டது.

நன்னிலைக்கண் தன்னை நிற்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினும்
உயர்த்து நிற்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான் (நாலடியார் 248) என்ற செய்யுள் கருத்து ஒரு புடை ஒத்திருந்தலை அறிக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

என வழங்கும்

# திருத்தொண்டர் புராணம்

## பாயிரம்

## வாழ்த்து

*நடராசர் துதி*

0001. உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்;
நிலவு லாவிய நீர்மலி வேணியன்;
அலகில் சோதியன்; அம்பலத் தாடுவான்;
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

இறைவனான, சிவபெருமான், உலக உயிர்களால் 'இன்ன தன்மையன்' என்று எடுத்துக்கூறுவதற்கு அரியவன். அரியவனாயினும் யாவரும் வணங்கும்படியாக பிறைச்சந்திரனையும் கங்கையையும் அணிந்த சடையினை உடையவன். அளவில்லாத ஒளி பொருந்தியவன். தில்லையம்பலத்தில் திருக்கூத்து ஆடுபவன். மலர்போன்று மென்மை யானதும் சிலம்பினை அணிந்ததுமான திருவடிகளையுடைய அத்தகைய இறைவரை வாழ்த்தி வணங்குவோம்.

**20. புண்ணியம் சேர்உந்திப் புலத்தே வளிதரித்துக்**
**கண்ணிய வாக்காம் கருப்பமாய்–நண்ணித்**

பெருமை மிக்க இவ்வுலகில், புண்ணியம் வாய்ந்த உந்தியில் தோன்றிய காற்று, வாக்கு என்னும் கருத்தரித்து இருந்து, (வளி-காற்று, **கண்ணியம்**-பெருமை, **நண்ணி**-அடைந்து, **உந்திப்புலம்**-கொப்பூழ்) 20

**21. தலைமிடறு மூக்குஉரத்தில் சார்ந்து இதழ்நாத் தந்தம்**
**உலைவிலா அண்ணத்து உருவாய்த்–தலைதிரும்பி**

தலை, தொண்டை, மூக்கு, மார்பு ஆகிய உறுப்புகளைச் சார்ந்து உதடுகள், நாக்கு, பற்கள், குறையில்லாத அண்ணம், ஆகியவற்றால் உருப்பெற்று, (**மிடறு**-தொண்டை, **உரம்**-மார்பு, **இதழ்**-உதடு, **அண்ணம்**-மேல்வாய்). 21

**22. ஏற்பமுதல் முப்பது எழுத்தாய்ச் சார்பு இருநூற்று**
**நாற்பது எழுத்தா நனிபிறந்தாய்–மேற்படவே**

தலைதிரும்பி உலகம் ஏற்க, முதல் எழுத்து முப்பதாகவும் (உயிர் 12, மெய் 18), சார்பெழுத்து இருநூற்று நாற்பதாகவும் (உயிர் மெய் 216, உயிரளபெடை 7, ஒற்றளபெடை 11,

குற்றியலுகரம் 1, குற்றியலிகரம் 1, ஆய்தம் 1, ஐகாரக்குறுக்கம் 1, ஔகாரக்குறுக்கம் 1, மகரக் குறுக்கம் 1) சிறப்புடன் பிறந்தாய் (மேற்பட-பிறகு) 22

**23. எண்முதலாகப் பகரும் ஈராறு எனும்பருவம்**
**மண்முதலோர் செய்துவளர்க்கும்நாள்—கண்மணிபோல்**

நீ பிறந்த பிறகு எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல்நிலை, இடைநிலை, இறுதிநிலை, போலி, பதம், புணர்ச்சி ஆகிய பன்னிரண்டு (எழுத்திலக்கணப்) பருவங்களாகச் செய்து இவ்வுலகில் முதன்மை வாய்ந்த, புலவர்கள் வளர்க்கும் காலத்தில், (பகரும்-கூறப்படும், பருவம்-பகுதி) 23

**24. பள்ளிக்கூடத்து அசையாம் பற்பல தொட்டில் கிடத்தித்**
**தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி—உள் இலகு**

உன்னை தங்கள் கண்மணிபோல் பள்ளிக் கூடங்களில் அசை என்னும் பற்பல தொட்டில் கிடத்திச் சிறுவர்கள் ஒன்றாகக் கூடித் தள்ளித் தாலாட்டி, (அசை-ஓலைச் சுவடிகளை வைத்துத் தூக்கிச் செல்லும் பலகை; தால்-நாக்கு; தாலாட்டி-அ, ஆ என நாவால் ஒலித்துப் பழகி) 24

**25. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்**
**மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்—மஞ்சரையே**

உள்ளது விளங்கும்படி மஞ்சள் பூசிக் குளிப்பாட்டி, மையிட்டு, முப்பால் (தாய்ப்பால் பசுவின் பால், ஆட்டின் பால்) மிகுதியாகப் புகட்ட நீ வளர்ந்தாய் (சிலேடைப் பொருள்; ஏடுகளில் மஞ்சள் தடவி, எழுத்து விளங்க மை பூசி அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் புகட்டத் தமிழ் வளர்கிறது. (மஞ்சர்-மைந்தர்) 25

**26.** **பன்னிஒரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்**
**உன்னை வளர்த்துவிட ஒண்ணுமோ—முன்னே**

மைந்தர்களைக் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனப் பத்துப் (பிள்ளைத் தமிழ்) பருவங்களில் நீ வளர்த்தாய். அத் தகைய உன்னை ஒருவரால் வளர்த்து விட முடியுமோ? *26*

**27.** **நினையும் படிப்பெல்லாம் நின்னைப் படிப்பார்**
**உனையும் படிப்பிப்பார் உண்டோ—புனைதருநல்**

உலகோர் தாம் விரும்பும் கல்வியனைத்தையும் உன்னிட மிருந்து கற்பார்கள். உன்னைப் படிக்க வைப்போரும் உண்டோ? *27*

**28.** **செய்யுள்சொல் நான்கும்உயர் செந்தமிழ்ச்சொல்**
**ஓர்நான்கும்**
**மெய்உட்பொருள் ஏழ்விதத் திணையும்—மையில் எழுத்து**

அணிவதற்குரிய இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கு செய்யுள் சொற்களும், பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு செந்தமிழ்ச் சொற்களும்; கைக்கிளை, பெருந்திணை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய அகத்திணை ஏழு; வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்னும் புறத்திணை ஏழு என்னும் திணைகளாகிய மெய்ப் பொருள்களும். *28*

**29.** **ஆதியாப்பு எட்டும் அலங்காரம் ஏழ்ஐந்தும்**
**பேதியாப் பேரெழில் மாப்பிள்ளையாய்ச்—சாதியிலே**

குறைகளற்ற எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் ஆகிய எட்டு யாப்பு உறுப்புகளும், தன்மை யணி முதலான முப்பத்தைந்து அணிகளும் இயைந்து

சிறிதும் வேறுபடாத பேரழகு கொண்ட மாப்பிள்ளையாகி, (சாதி-வெண்பா முதலிய நான்கு பாடல் வகை; **மாப் பிள்ளை**-மணமகன்) *29*

**30. ஆங்குஅமை செப்பல்பண் அகவல்பண் துள்ளல்பண்**
**தூங்கல்பண் பட்டத்துத் தோகையரா—ஓங்குமனத்து**

அந்த அந்தப் பாவகைக்குப் பொருந்த அமைந்த செப்பலோசை, அகவலோசை, துள்ளல் ஓசை, தூங்கலோசை ஆகிய நான்கு பண்களும் பட்டத்து ராணிகளாகவும் (**தோகையர்**-பெண்கள்) *30*

**31. எண்கருவி ஐந்து ஈன்றிடு நூற்று மூன்றான**
**பண்களும்பின் கல்யாணப் பாவையரா—எண்கொளும்**

மனத்தால் உயர்வாக எண்ணப்படும் தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி ஆகிய ஐந்து இசைக் கருவிகள் பெற்ற நூற்று மூன்று பண்களும் பின்னர் ஏற்றுக் கொண்ட காமக்கிழத்தியராகவும் விளங்க, (**பின் கல்யாணப் பாவையர்**-காமக் கிழத்தியர்) *31*

## 54. குறத்தி, மலைவளம் கூறுதல்

இராகம் : புன்னாகவராளி தாளம் : ஆதி

கண்ணிகள்

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே.

அ-ள் : வானரம் - குரங்கு (இங்கு ஆண் குரங்கு); மந்தி - பெண்குரங்கு; வான்கவி - வானத்தில் உள்ள தேவர்கள்; கானவர் - வேடர்; கமனம் - வான்வழியாகச் செல்லுதல்; காயசித்தி - உடலை அழியாது நிலைபெறச் செய்தல்; பரிக்கால் - குதிரையின் கால்; வழுகும் - வழுக்கும் (இடைக்குறை); கூனலிளம் பிறை - வளைந்த இளம்பிறை நிலா.

தெ-ரை : ஆண் குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்துக் கொடுத்துப் பெண் குரங்குகளைத் தழுவும்; அக்குரங்குகளால் சிதறியெறியப் படுகின்ற பழங்களை வானுலகத்தில் வாழும் தேவர்கள் இரந்து இரந்து வேண்டிக் கேட்பார்கள்; வனவேடர்கள் தம் கண்களால் ஏறெடுத்தப் பார்த்து உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள்! வானின் வழியாகச் செல்லும் சித்தர்கள் கீழே இறங்கிவந்து காயசித்தி மருந்துகளாகிய வனமூலிகைகளை வளர்ப்பார்கள்; தேன் கலந்த மலை அருவிகளின் அலைகள் மேல் எழுந்து வானத்திலிருந்து வழிந்து ஓடும்; அதனால் செந்நிறச் சூரியனின் தேரிலே பூட்டிச் செல்லும் குதிரைக் கால்களும் தேர்ச் சக்கரமும் வழுக்கிவிழும், வளைந்த இளம்பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியை உடைய அழகரான திருக்குற்றால நாதர் எழுந்தருளி யிருக்கின்ற

திருக்குற்றாலமாகிய இச்சிறப்பு வாய்ந்த திரிகூட மலைதான் எங்களுக்கு உரிமையாக நாங்கள் வாழ்கின்ற மலை ஆகும்.

கு-ரை : காயசித்தி : உடலை அழியாது நிலைபெறச் செய்தல்; உடல் அழியாத நிலைமைபெறச் செய்யும் செயல்கள். அந்நிலையினைக் கொடுக்கின்ற மலை, மருந்துச் செடிகளைக் குறித்தது. (ஆகுபெயர்).

வழுகும் : 'ஒழுகும்' என்பதற்கேற்ப இசைநோக்கி 'வழுக்கும்' என்பது 'வழுகும்' எனக் ககரம் குறைந்து இடைக்குறையாக வந்தது.

நயவுரை : "தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்; செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்" என்ற வரிகள் நம் உள்ளத்தில் சுவையினைச் சுரக்க வைக்கும் சுந்தர வரிகள் ஆகும்.

**முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்**
**முற்றம்எங்கும் பரந்துபெண்கள்**
**சிற்றிலைக் கொண்டோடும்**

**கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்**
**கிம்புரியின் கொம்பொடித்து**
**வெம்புதினை இடிப்போம்**

**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்**
**தேனலர்சண் பகவாசம்**
**வானுலகில் வெடிக்கும்**

**வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்**
**வளம்பெருகும் திரிகூட**
**மலை எங்கள் மலையே.**

அ-ள் : முழங்குதிரை - (முழங்கு+திரை) முழங்கும் அலை; புனலருவி - தண்ணீர் அருவி; கழங்கு - வெறியாட்டாளன் ஆடல்; சிற்றில் - சிறிய மணல் வீடு; கிம்புரி - யானைக்கொம்பு; வெம்புதினை - வறுத்த தினைத்தானியம்; தேமா - தேனான மாம்பழம்; மகராசர் - பெருமையுடைய மன்னர், திருக்குற்றால நாதர்.

தெ-ரை : ஒலிக்கின்ற அலைகளை உடைய நீர்வீழ்ச்சி செல்லும் வேகத்தில் கழங்காடுகின்றது என்னும்படி முத்துக்களை ஒதுக்கிச் செல்லும்; அந்த அருவி மக்கள் வாழும் வீட்டின் முற்றங்களில் எல்லாம் பரவிச் சென்று சிறுமிகளின் மணல் வீடுகளை அழித்துக் கொண்டு ஓட்டம் பிடிக்கும்; நாங்கள் மலைக் கிழங்குகளைத் தோண்டியும், தேன் இறால்களைப் பிய்த்து எடுத்தும், மலையின் செழிப்பைப் பாடிக்கொண்டே செல்வோம், வறுத்த தினைத் தானியத்தை

இடிப்போம்; இளமை பொருந்திய குரங்குகள் இனிமையான மாம்பழங்களையே பந்தாகக் கொண்டு அடித்து விளையாடும்; தேன்பெருகி ஓடுகின்ற செண்பகப் பூவின் மணம், தேவர்களின் உலகத்தில் போய்ப் பரவும்; அருளினை வழங்குகின்ற திருக்குற்றால நாதருக்கு உரிய எல்லா வளப்பமும் பெருகியிருக்கின்ற திருக்குற்றால மலையே எங்களுக்குரிய, நாங்கள் வாழும் மலையாகும்.

2. நாளைக்கு ஆற்றிலே வெள்ளம் வரப்போகிறதென்பதற்கு உரிய குறிகள் தோன்றுகின்றன. தென்மேற்குத் திசையிலே மலையாள மின்னலும் தென்கிழக்குத் திசையிலே ஈழத்து மின்னலும் சூழ வளைந்து மின்னிக் கொண்டிருக்கின்றன. நேற்றும் இன்றும் மரக்கொம்புகளைச் சுற்றியவாறு காற்று அடிக்கிறது. கிணற்று நீரிலே இருக்கின்ற சொறித் தவளைகள் கூப்பிடுகின்றன. சேற்றிலே வாழும் நண்டுகள் தம் வளைகளுள் மழைநீர் புகுந்து விடாதபடி சேற்றினால் வளைவாயில்களை அடைக்கின்றன மழை நீரைத் தேடி ஒரு கோடி வானம்பாடிப் பறவைகள் அங்குமிங்கமாக வானத்திலே பறந்து ஆடிக்கொண்டிருக்கின்றன. உலகமெல்லாம் போற்றும் திருமாலாகிய முக்கூடலின் அழகருக்கு ஏற்றவரான பெரிய பண்ணையைச் சார்ந்த சேரியிலுள்ள பள்ளர் வகையினரெல்லாம் மழையினை வரவேற்று ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோம். வாருங்கள்!

**இராகம்–ஆனந்த பைரவி** **தாளம்–அடதாளம்**

**சிந்து**

**ஆற்றுவெள்ளம் நாளைவரத்**
**தோற்று தேகுறி - மலை**
**யாள மின்னல் ஈழ மின்னல்**
**சூழ மின்னுதே!**

**நேற்று மின்றுங் கொம்பு சுற்றிக்**
**காற்ற டிக்குதே - கேணி**
**நீர்ப்படு சொறித்த வளை**
**கூப்பிடு குதே!**

**சேற்று நண்டு சேற்றில் வளை**
**ஏற்றடைக்கு தே - மழை**
**தேடி யொரு கோடி வானம்**
**பாடி யாடுதே!**

**போற்றுதிரு மாலழகர்க்**
**கேற்ற மாம்பண்ணைச் - சேரிப்**
**புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித்**
**துள்ளிக் கொள்வோமே** 36

(ஈழமும் கன்னியும் எதிர்த்து மின்னினால் நாளை மழை பெய்யும் என்பது தென்பாண்டிச் சீமையிலே வழங்கிவரும் பழமொழி.

அதனையே நயமுடன் முதற்கண்ணியிலே கவிஞர் கூறுகின்றார். கொம்பு சுற்றிக் காற்றடித்தல்-காற்றுச் சுழற்றி அடித்தல், மாம்பண்ணை பெரியபண்ணை புள்ளி-வகையினர் சொறித்தவளை சொறிகளையுடைய தவளை. கேணி-கிணறு.)

2. பொருநை நதியின் இந்தக் கரைக் கால்வாய் அந்தக் காரைக்கால்வாய் என்று ஏமமென்றும் சாமமென்றும் பாராமல் மழை பெய்ததும் நாமல்லவோ ஓடிப்போவோம். அதனால், அழப்படிப் போவதற்குத் தகுதியான தோணியைத் துறையிலே சிக்கெனக் கட்டி வையுங்கள். படல், தாழைக் குடை, கொங்காணி ஆகியவை எல்லாம் அப்போது தயாராயிருக்க வேண்டும். காவற் கொம்புகள் சுருக்காக எடுத்துக் கொள்வதற்கு வசதியாகப் பக்கத்திலே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். சீலைப் பந்தமும், அதற்கு ஊற்றும் விளக்கெண்ணெயும் முன்னதாகவே தேடி வைத்துக் கொள்ளுங்கள். முக்கூடல் அழகரின் பண்ணையாட்கள் மிகுந்துள்ள சேரியிலே பள்ளர்கள் அனைவரும் குரவையிட்டு எழுவதற்குரிய நாள் இது. எல்லோரும் ஆடிப்பாடி எழுந்து வாருங்கள்.

**இக்கரைக்கா லிற்பொருநை**
**அக்கரைக் காலின் - மழைக்**
**கேம மென்றும் சாமமென்றும்**
**நாமல்லோ போவோம்**

**தக்கதோணி மைத் துறையிற்**
**சிக்கெனக் கட்டும் - படல்**
**தாழைக்குடை கொங்காணியும்**
**வேளைக்கே வேண்டும்**

**பக்கமே யுஞ் சூழ்கம்புசு**
**ருக்க வாங்கிடும் - சீலைப்**
**பந்தமும் விளக் கெண்ணெயும்**
**முந்தவே தேடும்**
**முக்கூடல் அழகர் பண்ணை**
**மிக்க சேரியில் - பள்ளர்**
**முழுதுங் குரவை யிட்டே**
**எழுதின மாடீர்.** 37

## நிலத்தில் நீரின்மை

பாலை நிலத்தில் ஒரே கொடிய வெப்பம்! அதனால், மானின் வாய் வெந்துபோய் உள்ளது! மேலும் மானுக்குத் தாகவிடாயும் மிகுதி! நெருப்பிலிருந்து நீர் கிடைத்தாலும் குடித்துவிடும் - அப்படி ஒரு பேரெண்ணம் மானுக்கு! அந் நிலையில் விடாய் மிகுதியால் வெதும்பிய மான், செந்நாயின் வாயிலிருந்து வடியும் அருந்தத்தகாத எச்சில் நீரைக்கூட அருந்தத் தகும் நீர் என்று கருதி மகிழ்ந்து, நாவினால் நக்கி விக்கி நிற்கும் காட்சியைத்தான் காணலாம்! ['செந்நாய்க்கு அஞ்சி ஓடுதற்குரிய மான், அதன் வாயிலிருந்து வடியும் நீரை

நக்கிக் குடித்து விக்கும்' என்பது. வெம்மை மிகுதியால் அவை தத்தம் இயல்புகளை மறந்து களைத்திருந்தன என்றற்காம்.]

**தீயின் வாயின் நீர் பெறினும் உண்பதோர்**
**சிந்தைகூர, வாய் வெந் துலர்ந்து செந்**
**நாயின் வாயின்நீர் தன்னை, நீர்எனா**
**நவ்வி நாவினால் நக்கி விக்குமே!** 83

தீயின்வாய் - நெருப்பில். சிந்தை - எண்ணம். கூர - மிக. வாயின் நீர்தன்னை - வாயிலிருந்து வடியும் நீரை. நவ்வி - மான்.

## நிலத்தின் வெம்மை

சிறந்த வானுலகத்திலுள்ள தேவர்கள், நிலத்தில் தங்கள் திருவடிகளை வைக்காமலிருப்பது, அப் பாலை நிலத்தின் வெப்பக் கொடுமையைத் தாங்கமுடியாமை கருதியேயாகும். இவ்வாறு இருக்கவும், இந் நிலவுலகத்துள்ள மனிதர் அப் பாலை நிலத்தில் செல்வது எளியதாகுமோ? ஆகாது. [தேவர்களின் காலடிகள் நிலத்திற் படா வென்பதனை இப்படி நயமாக உவமித்துக் கூறுகின்றனர்.]

**இந் நிலத்துளோர் ஏகல் ஆவதற்கு**
**எளிய கானமோ? அரிய வானுளோர்**
**அந் நிலத்தின்மேல் வெம்மையைக் குறித்து**
**அல்லவோ, நிலத்து அடி யிடாததே!** 84

ஏகல் ஆவதற்கு - ஏகுவதற்கு. கானம் - பாலை நிலம். வானுளோர் - வானுலகத்தில் உள்ளவர்; தேவர்.

## இரவியும் இரு பொழுதும்

ஞாயிற்றினுடைய பச்சைக் குதிரைகள் வானத்திற் பகல் வேளையில் இயங்கிச் செல்கின்றன; இரவில் செல்வதில்லை. ஏன் தெரியுமா? சொல்லுகிறேன் கேளுங்கள்; ஞாயிறு பகலில் காளி வாழும் பாலைநிலத்தைக் கடந்தது. அப்போது அந்நிலத்தின் கொடிய வெம்மையால் அதற்கு மிக்க களைப்பு உண்டாயிற்று. அதனைத் தணித்துக் கொண்டால்தான் அது

மறுபகலில் இயங்கமுடியும். அப்படித் தணித்துக் கொள்ளு வதற்கு அதற்கு இருக்கும் வேளை இரவுதான்! அதனால்தான் ஞாயிறு இரவில் அங்கே இயங்குவதில்லை!

**இரு பொழுதும் இரவி பசும் புரவி விசும்பு**
**இயங்காதது இயம்பக் கேண்மின் -**
**ஒரு பொழுதும் தரித்தன்றி, ஊடுபோக்கு**
**அரிது அணங்கின் காடு என்று அன்றோ!** 85

இரு பொழுது - பகல், இரவு என்னும் இரண்டு வேளை கள். இரவி - ஞாயிறு. புரவி - குதிரை. விசும்பு - வானம். இயங்காதது - செல்லாததன் காரணம். இயம்ப - சொல்ல. தரித்து - தங்கி இளைப்பாறி. ஊடு - இடையே. போக்கு - போதல். அணங்கு - காளி; இது மிகச் சிறந்த கற்பனை.

## பனிநீரும் மழைநீரும் வியர்வை நீரே!

கார்மேகமும் வெண்ணிலவும்; பாலை நிலத்தைக் கடந்து செல்வோம், என்று கருதி மெல்ல மெல்லச் சென்றன. ஆனால் அந்நிலமெங்கும் ஒரே கொடிய வெப்பமாக இருந் தது. அவற்றால் - அதனைப் பொறுக்க முடியவில்லை. அதனால் விரைந்து ஓடலாயின. அப்படி ஓடும்போது அவற்றின் உடல் இளைத்து வேர்வையாகக் கொட்டிற்று. ஐயோ! அவ்வாறு கொட்டிய வியர்வை நீரையே கார்மேகம் மழைநீராகவும், வெண்ணிலவு பனிநீராகவும் பெய்தன!

**'காடு இதனைக் கடத்தும்' எனக் கருமுகிலும்**
**வெண்மதியும் கடக்க, அப்பால்**
**ஓடிஇளைத்து உடல் வியர்த்த வியர்வன்றோ,**
**உகு புனலும் பனியும் அம்மா!** 86

கடத்தும் - கடந்தும் செல்வோம். முகில் - மேகம். மதி - நிலவு. உகு - சொரிந்த. புனல் - மழைநீர் [புனலும் பனியும். பாலையைக் கடந்து சென்றபின் பெய்யப்படுவன என்று அறிதல் வேண்டும்.]

## தேவர் வாழ்க்கை

தேவர்கள் வானத்தின் உச்சியிலே குளிர்ந்த கார்மேகத் தைத் திரைச்சீலையாக அமைத்துக்கொண்டு, சந்திரனை

விசிறியாகப் பிடித்து விசிறிக்கொண்டும் இருக்கிறார்களே எதன்பொருட்டுத் தெரியுமா? கொடிய வேகம் மிகுந்த பாலைநிலத்தின் பொறுக்கமுடியாத வெப்பக்கொடுமையைச் சிறிதேனும் தணித்துக்கொள்ளும் பொருட்டேயாகும் அல்லவோ!

**விம்மு கடுவிசை வனத்தின் வெம்மையினைக்**
**குறித் தன்றோ, விண்ணோர் விண்ணின்**
**அம் முகடு முகில்திரை இட்டு, அமுத வட்ட**
**ஆலவட்டம் எடுப்பது அம்மா!** 87

விம்மு - மிகுந்த. கடு - கொடிய. விசை - வேகம். வனம் - பாலைநிலம். விண்ணோர் - தேவர். விண் - வானம். மை - கரிய. முகடு - உச்சி. முகில் திரை - மேகமாகிய திரைச்சீலை. இட்டு - அமைத்து. அமுதவட்டம் - நிலா. ஆலவட்டம் - விசிறி. அமுத வட்ட ஆலவட்டம் - வட்ட நிலவாகிய விசிறி.

## பேயின் மூச்சும் மரத்தின் புகையும்

இவ்வுலகம் இடம்விட்டுப் பெயர்ந்து ஓடிப் போகாமல் காத்துக்கொள்ளும் பொருட்டு, இப்பாலை நிலத்தில் காளி தேவியால் நிறுத்திவைக்கப்பட்ட பேய்கள், தனித்தனியாக நின்று பெருமூச்சுவிட்டால் எப்படி யிருக்குமோ அதுபோல, இப் பாலை நிலத்திலுள்ள மரங்கள் எல்லாம் எரிந்து கரிந்து புகைந்து கிடக்கின்றனவே!

**நிலம் புடை போர்ந்து ஓடாமே,**
**நெடு மோடி, நிறுத்திய பேய்**
**புலம்பொடு நின்று உயிர்ப்பன போல்,**
**புகைந்து மரம் கரிந்து உளவால்** 88

புடை பெயர்தல் - இடம் விட்டுப் பெயர்தல். நெடு - சிறந்த. மோடி - காளி. புலம்பு - தனிமை. உயிர்ப்பன - பெருமூச்சு விடுவன.

## வறண்ட நாக்கும் முதிய பேயும்

நன்றாய் முற்றிய நீண்ட மரங்களின் பொந்துகளிலிருந்து பெரிய பாம்புகள் வெளிப்படுதல், பசியால் உடல் மெலிந்த

பேய்கள், தாகவிடாய் பொறுக்க மாட்டாமையால் வாயிலுள்ள ஈரம் புலர்ந்து, வறண்ட நாக்குகளை வெளியே நீட்டிக்கொண்டிருப்பன போலத் தோன்றும்.

**வற்றிய பேய் வாய் உலர்ந்து,**
**வறள்நாக்கை நீட்டுவ போல்,**
**முற்றிய நீள் மரப் பொதும்பின்**
**முது பாம்பு புறப்படு மால்!** 89

வற்றிய - மெலிந்த. உலர்ந்து -ஈரம் காய்ந்து. வறள் - வறண்ட. பொதும்பு - பொந்து. மரப்பொந்தினுள்ளும் இருக்க மாட்டாமல் பாம்புகள் வெளியேறுவதை இப்படிக் கூறுகின்றார்.

## சூறாவளியின் இயல்பு

காண்பவரின் கண்கள் சுழலும்படியாகப் பாலை நிலத்தில் தோன்றி வருகின்ற கானலானது, தண்ணீர் அலையலையாக மிதந்து வருவதுபோல் தோன்றும். அந்தத் தண்ணீரில் சுழிகள் சுழன்று வருவன போல, சுழல் காற்றும் சுழன்று சுழன்று அடிக்கும்.

**சுழி சுழல வரு பேய்த்தேர்**
**மிதந்து வரு நீர்; அந் நீர்ச்**
**சுழி சுழல வருவதெனச்**
**சூறைவளி சுழன்றிடுமால்!** 90

பேய்த்தேர் - கானல்நீர். சூறை வளி - சுழல் காற்று.

## நீர் பூத்த நெருப்பு

சுழன்று வீசிய சூறைக்காற்று, உயிர் போய் அழிந்த உடலைச் சுட்டெரித்த சுடலைச் சாம்பலைக் கிளறி அடித்தது. அப்படிக் கிளறி அடித்த சாம்பல் அங்குக் கிடந்த மாணிக்கங்களின் செந்நிறத்தை மறைத்தது. அவ்வாறு செந்நிறம் மறைந்து கிடக்கும் மாணிக்கங்கள், புகையால் மூடப்பட்ட நெருப்பைப் போலவும். சாம்பலால் மூடப்பட்ட நெருப்பைப் போலவும் தோன்றுவனவாம்!

**சிதைந்த உடல் சுடுசுடலைப் பொடியைச் சூறை**
**சீத்தடிப்பச், சிதறிய அப் பொடியால், செம்மை**
**புதைந்த மணி புகைபோர்த்த தழலே போலும்!**
**போலாவேல், பொடி மூடும் தணலே போலும்! 91**

சிதைந்த - உயிர் போய் அழிந்த. பொடி - சாம்பல். சூறை - சூறாவளி. சீத்து - கிளறி. புதைந்த - மறைந்த. மணி - இரத்தினம். தழல் - நெருப்பு. பொடி மூடு தணல் - நீறு பூத்த நெருப்பு.

## முத்துச் சொரிதல் கண்ணீர் பொழிதல்!

மண் வரைக்கும் ஓடி, ஈரம் நீங்கி, மிகவும் வறண்டு, வெடிப்புக்களால் திறந்த இடங்களில், மூங்கில்கள் கணுக்கள் வெடித்து முத்துக்களைச் சொரியும். அம் முத்துக்கள் மூங்கில் இரக்கப்பட்டு இயல்பாகச் சொரிகின்ற கண்ணீரைப் போன்று விளங்கும். அல்லது பாலை நிலத்தின் வெப்பக் கொடுமையைக் கண்டோர் மனமுருகிச் சொரிகின்ற கண்ணீர்த் துளிகளைப் போன்றிருக்கும்!

**மண் ஓடி, அற வறந்து, அங்காந்த**
**வாய் வழியே வேய் பொழியும் முத்தம், அவ்வேய்**
**கண்ஓடிச் சொரிகின்ற கண்ணீர் அன்றேல்**
**கண்டு இரங்கிச் சொரிகின்ற கண்ணீர்போலும்! 92**

அற - முழுக்க. வறந்து - வறண்டு. துறந்து - நீங்கி. அங்காந்த - வாய் திறந்த. வேய் - மூங்கில். முத்தம் - முத்து. கண்ஓடி - இரக்கப்பட்டு; கணுக்கள் வெடித்து. இரங்கி - மனம் வருந்தி.

## முத்துக்கள் கொப்புளங்கள்

கணுக்கள் வெடித்த மூங்கில்களிலிருந்து முத்துக்கள் வேகமாகத் தெறித்துப் பாலைநிலத்தில் விழுந்து கிடக்கும். அவை, பாலை நிலம் வருந்தி வெதும்பியமையால், அதன் உடம்பில் தோன்றிய வியர்வைப் புள்ளிகளைப் போன்று இருக்கும்; அல்லது கொப்புளங்களை ஒத்திருக்கும்.

**வெடித்த கழை, விசை தெறிப்பத் தரைமேல் முத்தம்**
**வீழ்ந்தன, அத்தரை புழுங்கி அழன்று, மெய்ம்மேல்**
**பொடித்த வியர்ப் புள்ளிகளே போலும் போலும்!**
**போலாவேல், கொப்புளங்கள் போலும் போலும்!** 93

கழை - மூங்கில். விசை - வேகம். புழுங்கி - வருந்தி. அழன்று - வெதும்பி. பொடித்த - தோன்றிய. வியர்ப்புள்ளி - வியர்வைத் துளி. 'விசைத்து எறிந்த முத்தம் மண்மேல்' 'அழன்று மேன்மேல்' என்பன வேறு பாடங்கள். மூங்கில் வெடித்தது கோடை வெம்மையால்.

## காற்றின் தன்மை

நீர் பரந்த கடல்கள், வலிய அலைகளாகிய கைகளைப் பல முறை கரையிலே செலுத்துவதும், திக்கு யானைகளின் காதுகளிலிருந்து காற்று வீசுவதும், படர்ந்த கொடிய பாலை நிலத்திலிருந்து வீசிவரும் வெப்பம் மிகுந்த காற்றுத் தம்மிடம் வாராமல் தடுத்துக் கொள்வதற்கே யாகும்!

**பல் கால் திண் திரைக் கரங்கள் கரையின் மேன்மேல்**
**பாய் கடல்கள் நூக்குமது, அப் படர்வெங் கானில்**
**செல் காற்று வாராமல் காக்க அன்றோ!**
**திசைக் கரியின் செவிக் காற்றும் அதற்கே**
**அன்றோ!** 94

பல்கால் - பலமுறை. திண் - வலிய. திரைக்கரம் - அலையாகிய கை. பாய் - நீர் பரவிய. நூக்கும் - தள்ளும். கரி - யானை. அதற்கு - தடுப்பதற்கு.

## வெந்த வனமே இந்த வனம்!

வாட்படையுடைய முதற் குலோத்துங்க சோழன், முன்னொரு சமயம் பாண்டியரோடு முனிந்து பொருத போரிலே, பாண்டியர் முட்களையுடைய வழிகளிலும், கற்களையுடைய வழிகளிலுமாக ஓடிப் போயினர். அப்போது, வெள்ளாறு என்னும் ஆறும், கோட்டாறு என்னும் ஊரும் புகையால் மூடிக்கொண்டன. அவற்றிற்கு அருகில் வெந்த

காவற்காடுகளின் வெப்பம் வேண்டுமானால், காளிதேவி உறைகின்ற இந்தப் பாலைவனத்தில் வெப்பத்தை ஒத்திருக்கும்!

**முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓட,**
**முன்னொருநாள் வாள் அபயன் முனிந்த போரில்**
**வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட,**
**வெந்த வனம் இந்த வனம் ஒக்கும் ஒக்கும்; 95**

ஆறு - வழி. தென்னர் - பாண்டியர். அபயன் - சோழன். முனிந்து - வெகுண்டெழுந்து. வனம் - பகை மன்னரின் காவற்காடு. இந்த வனம் - காளி உறையும் பாலை நிலம். வெள்ளாறு - ஓர் ஆறு; புதுக்கோட்டைச் சீமையில் உள்ளது. கோட்டாறு, நாஞ்சில் நாட்டில் உள்ளது.

## மணலின் தன்மை

இலங்கை வேந்தன் இராவணனோடு போர் புரிவதற்கு எழுந்த இராமனுடைய குரங்குக் கூட்டங்கள், அலை கடலை அடைப்பதற்கு, இந்தப் பாலை நிலத்தினின்றும் ஒரு மணல் காணப் பெறாமையாலேயே, மலைகளைப் பெயர்த்தெடுத்து வருத்தமுற்றுக் கலங்கின.

**அணி கொண்ட குரங்கினங்கள்,**
**அலை கடலுக்கு அப் பாலை**
**மணல் ஒன்று காணாமல்,**
**வரை எடுத்து மயங்கினவே! 96**

அணிகொண்ட - போர் புரியப் புறப்பட்ட. வரை - மலை. மயங்கின - கலங்கின. ஒரு மணலை இட்டாலே அதன் வெம்மையால் கடல் முழுதும் வற்றிவிடுமே; அதனை அறியாமையினாலேதான், அவை மலைகளைப் பெயர்த்துத் தளர்ந்து மயங்கின என்பது கவியரசர் கற்பனை.

♦□♦

## *எல்லாரும் இன்புற்றிருக்க*

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே. 85

நான் பெற்ற இன்பம் - நான் பெற்றதான இறையருள் - கருணையால் உணர்ந்தறிந்த, பேரின்ப ஞானப் பேற்றை, இவ்வுலக

மக்களெல்லாம் பெற்றுய்ய வேண்டும் (பெறுக இவ்வையகம்). வானம் அளந்து நின்ற வேத விழுப்பொருளைக் கூற நான் பெற்ற ஞானம் - ஊனோடு கலந்து உணர்வோடு ஒன்றி உயிர்ப்படையச் செய்யும் வேத மந்திரம் இதுவாகும். இதை உளம் பற்றி நினைந்து நினைந்து துதிக்க இறைவன் திருவருள் தானே தேடி வந்தடையும். ஊன் பற்றி - ஊனோடு கலந்து. உணர்வுறு - உணர்வூட்டும், உயிர்ப்படையச் செய்யும். பற்றப் பற்ற - உள்ளத்தால் எண்ணித் துதிக்கத் துதிக்க. தலைப்படும் - வந்தடையும்.

## 13. சரீர சித்தி உபாயம்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. 724

உடம்பு அழிந்தால் உயிரும் அந்த உடலைவிட்டு நீங்கி விடும். பிறகு உயிருக்கு உற்ற துணையான, மெய்ஞ்ஞானமாகிய பரம்பொருள் சிந்தனையில், அவர்களால் ஈடுபடவும் இயலாது. எனவே உடம்பை அழியாது காத்திருக்கும் வழியைக் காண உடம்பை, அதில் உள்ள உயிரைக் காப்பதற்காகக் காப்பாற்றி வளர்த்து வரலானேன். திடம் - உறுதி. மெய்ஞ்ஞானம் - மேலான அறிவு, சேருதல் - ஈடுபடுதல். உபாயம் - வழி.

## ஆடி அடங்கிற்று ஆனந்தம் எல்லாம்

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக் கொடியாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார் 148
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே.

அடுதல் - சமைத்தல். அடிசில் - உணவு. மடக்கொடி - பெண். மந்தணம் - உடலுறவு. இறை - இதயம். நொந்தது - வலித்தது. வாய்க்குச் சுவையாக நன்கு சமைத்த உணவை உண்டு மகிழ்ந்தார். மனையாளோடு கூடிக் குலவி இன்புற்று மகிழ்ந்தார். திடீரென்று ஒருநாள் இடதுபக்கம் நெஞ்சு வலிக்கிறது என்றார். உடனே உடல் கீழே கிடக்கப் படுத்தார். பின்னர் எழுந்திருக்கவே இல்லை. இறந்தே போனார். இதுதான் வாழ்க்கை. இதுதான் உடல் அழியக் கூடியது என்பதற்கு அடையாளம்.

## 11. சிவபூசை

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே. 1823

உள்ளம், மனம், கருவறை. ஊனுடம்பு ஆலயம். ஆருயிர்களுக்கு அருளை வாரி வழங்கும் வள்ளலாக விளங்குகிற பரம்பொருளைச் சென்று வழிபட வெளிவாசல் - கோபுரவாசல், வாய் அறிவு விளக்க முற்று அறியாமை இருளகன்று, தெள்ளத் தெளிவான மனநிலை வாய்க்கப் பெற்றவர்க்கு; உயிரே வழிபட்டு வணங்கத் தக்க சிவலிங்கம். உடலில் பொருந்தியுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களும் கோவிலின் ஐந்து பெரிய அழகிய மணி விளக்குகள். ஊன் உடம்பு - சதை உடல். சீவன் - உயிர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களையும், கள்ளப்புலன்கள் என்றது, அவை பொருந்தி உள்ள உடலுக்கு வஞ்சகமாக, அறிவைத் தம் இச்சைக்கு ஏற்பச் செயல்படச் செய்வதால், அவை கள்ளப்புலன்கள் எனப்பட்டன.

## ஒன்றே குலம் ஒருவனே தேவன்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன்இல்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே. 2104

ஒன்றே குலமும் - மனித குலம் முழுமையும் ஒன்றுதான். ஒருவனே தேவனும் - இறைவனும் ஒருவன்தான். நன்றே நினையுங்கள் - எப்போதும் எவர்க்கும் நல்லதையே நினையுங்கள்; நல்லதே செய்யுங்கள். இப்படி இருப்பவர்களுக்கு இறப்பில்லை. இறவாப் புகழுடன் அவர் வாழ்வார். வெட்கப்படாமல் துணிந்து நீங்கள் செல்லத் தக்க வழி வேறு இல்லை. எனவே மனத்துள்ளே சிவனை நினைத்து, அவனருளுணர்வோடு பொருந்தி, தடுமாற்றம் இன்றி அவன் திருவடி நினைந்து; நற்கதி அடையுங்கள். நாணம் - வெட்கம், இங்கே துணிவு. கதி - வழி. சித்தம் - மனம். நிலைபெற - நிலையாக. உய்தல் - பிழைத்தல், இங்கே நற்கதி.

# தாயாருக்குத் தகனக்கிரியை
## வெண்பா

**ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்**
**பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு**
**கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை**
**எப்பிறப்பிற் காண்பே னினி.** 1

பத்துமாதம் கருவறையில் சுமந்து உடம்பு நோக நொந்து பெற்று ஆண்பிள்ளை என்ற கணமே விருப்பத்தோடு தூக்கி அழகிய இரண்டு கைப்புறங்களில் ஏந்திப் பொற்கலசம் போன்ற தனங்களால் பாலைக் கொடுத்தவளாகிய அன்னையை இனி எப்பிறப்பிற் காணப் போகிறேன்?

**முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே**
**அந்திபக லாச்சிவனை யாதரித்துத் - தொந்தி**
**சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ**
**வெரியத் தழன் மூட்டுவேன்.** 2

இரவும் பகலும் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்து பத்துமாதம் சுமந்து வயிறு சரிய வருந்தித் தாங்கியீன்ற அன்னையாருக்கோ எரியும் அக்கினியை மூட்டுவேன்?

**வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்**
**கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்**
**சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ**
**விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.** 3

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் கட்டிலிலும் என்னைக் கிடத்தி இடுப்பில் தூக்கி வைத்துப் பாதுகாத்துச் சிறப்புச் செய்த அன்னையையோ கட்டையில் வைத்து நெருப்பிடுவேன்?

## விருத்தம்

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையி
லன்னையிட்ட தீ யடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்கமூள்கவே. 7

முன்னொரு காலத்தில் சிவன் இட்ட நெருப்பில் திரிபுரத்தில் தீப்பற்றியது. பின்னால் அனுமன் இட்ட நெருப்பு இலங்கையை எரித்தது. என் அன்னை இட்ட தீ அடிவயிற்றில் பற்றி எரிகிறது. யானும் இட்ட தீ மூண்டெரியட்டும் மூண்டெரியட்டும்.

சித்தர்என்றும் சிறியர்என்றும் வறியொணாத சீலர்காள்!
சித்தர்இங்கு இருந்தபோது பித்தர்என்று எண்ணுவீர்!
சித்தர்இங்கு இருந்தும்என்ன பித்தன் நாட்டிருப்பாரோ?
அத்தன்நாடும் இந்தநாடும் அவர்களுக் கெலாமொன்றே. 450

சித்தர் யார் சிறியர் யார் என்பதை அறியாதவர்களாகப் பலர் இருக்கிறார்கள். ஆனால், சித்தர் இங்கு இருந்தபோது அவரை பைத்தியம் என்று எண்ணுவார்கள். சித்தர் இங்கு இருந்தாலும் பித்தன் நாடாகிய சிவலோகத்திலும் இருப்பார். சித்தர்களுக்குச் சிவலோகமும் பூமியும் ஒன்றுதான்.

**கோயிலாவது ஏதடா? குளங்க லாவது ஏதடா?**
**கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே,**
**கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே!**
**ஆவதும் அழிவதுவும் இல்லை இல்லை இல்லையே.** 30

கோயிலையும் குளத்து நீரையும் வணங்கும் மூடர்களே, அவையாவும் உங்கள் மனத்துக்குள் இருக்கின்றது என்பதை உணர்வதால் உங்களுக்குக் குறையேதும் இல்லை.

சாதி ஆவது ஏதடா? சலந்திரண்ட நீரெலாம்
பூதவாசல் ஒன்றலோ, பூதம் ஐந்தும் ஒன்றலோ?
காதில்வாளி, காரை, கம்பி, பாடகம் பொன் ஒன்றலோ
சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ?

தேகத்திலுள்ள திரவம் யாவும் ஒன்று திரண்டு உருவாகிய சுக்கிலத்திலிருந்து தோன்றிய மனிதனுக்குள் சாதிய பிரிவினை ஏதும் இல்லை. நிலம் நீர் முதலிய பூதங்கள் நுழையும் வாசலும் ஒன்றே. பஞ்சபூதங்களும் ஒன்றே. காதில் அணியும் அம்பு போன்ற காதணியும், காரையும் கம்பியும் காலில் அணியும் பாடகமும் பல்வேறு நகை வடிவம் என்றாலும் யாவும் பொன்னாலானவையே அதுபோன்று சாதிய பேதம் எதுவுமில்லை.

கறந்தபால் முலைப்புகா, கடைந்த வெண்ணெய் மோர்புகா;
உடைந்துபோன சங்கினோசை உயிர்களும் உடற்புகா;
விரிந்தபூ உதிர்ந்தகாயும் மீண்டும்போய் மரம்புகா;
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே.

கறந்தபால் திரும்பவும் முலைக்காம்பினுள் புகுவதில்லை. கடைந்த வெண்ணெய் மீண்டும் மோரில் போய்ச் சேருவதில்லை. சங்கில் எழுப்பப் பெற்ற ஓசை மீண்டும் சங்கினுள் புகுவதில்லை. இதைப்போல் இறந்தவர் மீண்டும் அதே உடலுடன் பிறப்பதும் இல்லை.

நட்டகல்லைத் தெய்வம்என்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லுமந்திரம் ஏதடா!

**நட்டகல்லும் பேசுமோ நாதன்உள் இருக்கையில்!**
**சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?** 440

நட்டு வைத்த ஒருகல்லைத் தெய்வமாக நினைத்து நான்கு பூக்கள் சொரிந்து சுற்றிவந்து மொணமொண என்று மந்திரம் உச்சரிக்கிறீர்கள். மந்திரம் என்றால் இல்லையே உனக்குள்ளேதானே இருக்கிறான். ஆனால் நீ அதை உணரவில்லை. கறியைச் சுடவைக்கும் சட்டியும் சட்டுவமும் அந்தக் கறியின் சுவையை அறியாதது போல உனக்குள் உள்ள நாதனை நீ அறியவில்லை.